ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய – சமூக – இலக்கிய வெளியீடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

டிசம்பர் – 2014

மலர் - 46 இதழ் - 11

- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்**
  A.G.இராஜேந்திரம்
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்
- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  மட்டக்களப்பு மறை மாவட்டம்
- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் – 44
  மட்டக்களப்பு.
- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.



## உள்ளே....

அன்புடன் உங்களோடு .................. 01
பூமிக்கு இறங்கிய புனிதம் ........... 02
இயேசு பிறப்பு விழா ..................... 03
ஆயரின் கிறிஸ்து பிறப்பு ............. 05
கடுகுக் கதை ................................ 06
மேய்ப்புப் பணிச்சபையின் ............ 07
மார்கழிக் குளிரினிலே ................... 08
மனித உரிமைகளும் ..................... 09
இயேசு பிறந்த மாட்டு ..................... 11
அன்னையான ஆசிரியை ............. 12
எண்ணிப்பார்க்கையில் ................... 13
பாலன் பிறப்பிலொரு ..................... 15
பன்முகத் தன்மையை .................... 16
கிடைத்த கௌரவம் ........................ 17
இலக்கிய மஞ்சரி ............................ 18
தெய்வநீதி உயிர்த்தல் .................. 19
கடிநாய்ப் படலம் ............................ 20
திரைவிமர்சனம் ............................. 22
தேவதாயாரிடம் சரணடைவு ......... 24
புனிதர்களை அறிவோம் ............... 25
புனித மிக்கேல் கல்லூரி .............. 26
விவிலியம் கற்போம் ..................... 27
அறிவை வளர்ப்போம் .................. 28

**ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)**

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com

விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு.....!

திருவருகைக் காலம் மகிழ்ச்சியின் காலமா, தபசுகளின் காலமா என்னும் சந்தேகம் உங்களுக்கு ஏற்படலாம். ஆனால், ஒரு பழமொழி உரைப்பதுபோல பெரிய மகிழ்ச்சிகள் அழுகின்றன, பெரிய துன்பங்கள் சிரிக்கின்றன. ஏனென்றால் மனித வாழ்வில் பளிங்குக் கற்களும், சேறும் சகதிகளும் சேர்ந்தே உள்ளன. திருவருகைக் காலத்தில் மகிழ்ச்சியின் மணி ஓசை கேட்கிறது என்பது உண்மைதான். ஆனால், அதேசமயம் நமது கீழ் நாட்டங்களுடன் போராட வேண்டிய அவசியத்தையும் இக்காலம் உணர்த்துகின்றது.

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலம் உண்டு. சிரிக்க ஒரு காலம், அறுவடை செய்ய ஒரு காலம், அன்பு செய்ய ஒரு காலம், பிரிந்து செல்ல ஒரு காலம் உண்டு. இப்படி எல்லாவற்றிற்கும் ஒரு காலம் இருப்பதுபோல் திருவருகைக் காலமும் எமக்குப் பல செய்திகளைச் சொல்லி நிற்கின்றது.

**1. இது மனம் வருந்துதலின் காலம் :**

நாம் நம்முடைய பாவ இயல்புக்கும் நம்முடைய தவறான செயல்களுக்கும் மனித நேயமற்ற குற்றங்களுக்கும் மனம்வருந்த வேண்டும்.

**2. இது மனம் திரும்புதலின், திருந்துதலின் காலம் :**

மனம் வருந்தினால் மட்டும் போதாது, மனம் திரும்பவும் வேண்டும். மனம் திரும்புதல் என்பது தவறான வழிகளை, செயல்களை, எண்ணங்களை, இயல்புகளை விட்டு விட்டு நம்மையே திருத்திக்கொண்டு பாவ மன்னிப்பைப் பெறுவதாகும்.

**3. இது நம்பிக்கையின் காலம் :**

நம்பிக்கை என்பது நாம் எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்கின்ற மனவுறுதியாகும். விதை விதைத்தவன் அறுவடைக்காக நம்பிக்கையோடு காத்திருக்கின்றான். தேர்வு எழுதியவன் நல்ல பெறுபேறுக்காக நம்பிக்கையோடு காத்திருக்கின்றான். மண் சரிவில் பல உயிர்களை இழந்த தோட்டத் தொழிலாளர் தங்களுக்குப் புதிய வீடுகள், இல்லங்கள் கிடைக்காதா என்று காத்திருக்கின்றனர். அதுபோல் பாவ இயல்புக்கும், தவறான பழக்க வழக்கங்களுக்கும் அடிமைப்பட்டு இருளில் இருக்கின்ற நமக்கு விடியலாகப் பிறக்கப் போகின்ற இயேசுவின் வருகை நம்பிக்கை ஊட்டுகின்ற காலமாக இருக்கின்றது.

**4. இது ஆண்டவரின் வழியை செம்மைப்படுத்துகின்ற காலம் :**

ஜனாதிபதி வருகின்றார் என்றால் பல ஆண்டுகளாக பழுதடைந்த வீதிகள் ஒரே நாளில் புனரமைக்கப்படுகின்றது. தேர்தல் காலம் என்றால் வாக்குரிமைக்காக வாழ்க்கையையே பணயம் வைக்கின்ற காலம் இது! எத்தனையோ ஆயத்தங்கள் இந்த இலக்கைச் சென்றடைய எத்தனையோ அரசியல் நாடகங்கள் கட்டவிழ்க்கப்படுகின்றன. எத்தனையோ ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. திருமணம் திருவிழா என்றால் பல ஆயத்தங்கள். இவை சாதாரணமானவை. நியாயமான ஆயத்தம் ஆண்டவரின் வருகைக்காக நம்மைத் தயார்படுத்துவதே. அவரின் வருகைக்காக நம்மை செம்மைப்படுத்த வேண்டிய காலம். ஆண்டவரின் வழியை ஆயத்தப்படுத்துகின்ற நாமும் இதனால் நம்மையே நாம் தயாரிக்க வேண்டும். கிறிஸ்து பிறப்பு விழா உன்னதத்தில் அனைவருக்கும் மகிழ்ச்சியூட்டும் விழா. ஏழைகள் அனாதைகள், கைவிடப்பட்டோர் அனைவருக்கும் சந்தோசத்தைக் கொடுக்கும் விழா. எனவே, மண் சரிவினால் வீடு இழந்து நிற்கும் நம் உறவுகளுக்காக மன்றாடுவோம். ஆண்டவர் இயேசுவின் பிறப்பு அவர்களுக்கு நிம்மதியையும், அமைதியையும் அளிக்கும் பிறப்பாக அமைய அவர்களுக்காகச் செபிப்போம். உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழா நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!

"உலகம் பிறந்த நாள் முதலாய் - என்னுள்
உயிரும் துடித்த நொடி முதலாய்
உன்னைத் தேடி அலைகின்றேன்
உன் உறவை நாடி ஏங்குகின்றேன்"

● ஆசிரியர்

இறைவாக்கு

"உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக
உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக்கா 2:14)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வானுயரக் கோயில்செல்வ மடியில்
மானுடனாய்த் தேவமகன் குடிலில்
ஊனுடலம் போர்த்திமண் ஞாலகிற்கு வந்தமகன்
ஏனுறைந்தான் களிமண்ணாய்ச் சிலையில் ?

# பூமிக்கு இறங்கிய புனிதம்

காற்றின் திசையெங்கும்
கடவுளின் நறுமணம்
காற்றே உயிர்
காற்றே பிராணன்
யேசு -
மானுடத்தின் உயிர்க்காற்றை
சுமந்த இறைமகன்

காலத்தின் தீர்ப்பைக் கருத்துடன்
தோளில் சுமந்த வரலாறு - அவரது

இறைவனின் மீட்புப் பணியில்
யேசுதான் கதாநாயகன்

அவரே
மூலத் திருமறை முன்மொழிந்த
முதல் மானுடன்
பூமியில் தோன்றிய
புத்தம் புது நெருப்பு

அடிமட்ட மக்களின் உரிமைகள்
ஆதிக்கவர்க்கத்தால் குதறப்பட்டபோது
மனித மனங்களுக்கு ஒரு
புரட்சிகர ஆற்றலின் முனைப்போடு
தம்மை வெளிப்படுத்தியவர்

அடிமைப்பட்டோரின் உணர்வுக்கும்
சிறுமைப்படுவோரின் உணர்வுக்குமிடையே
வாழ்வின் பணியை
மானிடத் தோழமைமீது வளர்த்து
விடுதலையைப் போதித்த
விந்தை ஞானி

சடங்கு சம்பிரதாயங்களுக்குத்
தூர்வாரும் தூயபணியில்
அவர்
சந்திக்காத பாத்திரங்களே இல்லை.

காலம்
பூமியின் கரைகளெங்கும்
பூக்கோலமிட்டுக் கொண்டிருக்கிறது


பூமியோ
கடுங்குளிரில்
கறுப்புக் கம்பளம்
போர்த்தி
கால்நீட்டிப் புரண்டு
கொண்டிருக்க

மாதாவின்
மணிவயிற்றுச் சீதனம்
புனிதமிக்க மனிதமாய்
பூமிக்கு இறங்குகிறது

சிலிர்த்தெழுந்தது பூமி ஒரு
சின்னக் குழந்தையின் வரவால்
பூமிப்படுக்கை மீது
வழிநடந்து நொந்துதன்
மணிவயிற்றுச் சீதனத்தை
இறக்கிவைத்தாள் - மரியெனும் மாது

வறண்டு கிடந்த மண்ணில்
மணித்துளியென அருள்சுரந்து
ஓர் ஊழிகாலப் பெருமழையாய்
வானம் திறந்து வர்ஷிக்க
நிறைந்தனர் நம்பிக்கை கொண்டோர்

கலங்கிய பூமியோ கருக்கொள்ள
முளையென நம்பிக்கைப் பயிர்கள்
எழுந்தன கடினங்களைப் பிளந்து
இன்னும் மனிதர்
வான்நோக்கி
இருகரம் உயர்த்தி வேண்டினர்
அமைதியோ மண்ணின்
அறுவடையாய்ச் சுரந்தது.



- அ.ச. பாய்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

# இயேசு பிறப்பு விழா!



வரலாற்றில் நிகழ்ந்த சில பிறப்புகள் வரலாற்றையே மாற்றியிருக்கின்றன. சிலரின் பிறப்புகள் வரலாற்றிற்கு அணி சேர்த்துள்ளன. இட்லர் போன்ற சிலரின் பிறப்புகள் வரலாற்றைப் பின்னோக்கித் தள்ளியிருக்கின்றன.

ஆனால், வரலாற்றிற்கே வாழ்வு கொடுத்த பிறப்பு இயேசுவின் பிறப்பு. வரலாற்றின் பாதையையும் பார்வையையும் மாற்றி அமைத்தது இயேசுவின் பிறப்பு.

**ஒரு வரலாற்றுப் பிரச்சினை :**

இயேசுவின் பிறப்பு விழா கிறிஸ்தவத்தின் தொடக்கம் முதல் கொண்டாடப்பட்ட விழா அன்று. திருக்காட்சி, உயிர்ப்பு மற்றும் பெந்தகோஸ்து எனும் விழாக்களைத்தான் தொடக்கக் கிறிஸ்தவர்கள் கொண்டாடினர். உயிர்ப்பே மைய விழாவாகக் கொண்டாடப்பட்டது. ஏனெனில் உயிர்ப்பு கிறிஸ்துவ வாழ்வின் ஊற்றுச் சக்தி எனத் தொடக்கக் கிறிஸ்தவர்கள் நம்பினர். இயேசு இறந்தார், உயிர்த்தார், மீண்டும் வருவார் என்பதே தொடக்க நற்செய்தியின் கருச்செய்தியானது. இயேசுவின் பிறப்பைப் பற்றியோ அவருடைய குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் பற்றியோ தொடக்கத்தில் ஒன்றும் போதிக்கப்படவில்லை.

திருத்தூதர் பணியின் முதல் பகுதியில் காணப்படும் பேதுருவின் மறை உரைகளில் இறப்பு, உயிர்ப்பு என்னும் மறைபொருள்கள் மட்டுமே இடம்பெறுகின்றன. எனவேதான், இயேசுவைப் பற்றி முதலில் எழுதப்பட்ட நூல்களுள் ஒன்றான கொரிந்தியர் முதல் திருமுகத்தில் புனித பவுலடியார் இயேசுவினுடைய இறப்பு, உயிர்ப்புப் பற்றி மட்டுமே எழுதியுள்ளார். தமது மூன்றாவது பயணத்தின் தொடக்கத்தில் கலா 4:45ல் கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார் என்ற ஒருவரியின் மூலம் இயேசுவினுடைய பிறப்பைச் சுட்டிக் காண்பிக்கிறார்.

காலப்போக்கில் கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களின் எண்ணிக்கை பெருகிய வேளையில் கிறிஸ்துவின் இறப்பு, உயிர்ப்பு மற்றும் போதனைகளோடு அவர் செய்த ஏராளமான அருளடையாளங்கள் பற்றியும் பேசும்போது இயேசுவின் பிறப்பைப் பற்றிய குறிப்பை கலாத்தியர் நூலில் தந்துள்ளார்.

திருமுழுக்கு யோவான் காலம் முதல் இயேசுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருள்தந்தை யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் ஓம்மாதம் ஒன்பதாம் நாள் [2014.12.09] தமது பிறந்த தினத்தை நினைவு கூர்வதோடு இருபதாம் நாள் [2014.12.20] குருத்துவ வாழ்வில் ஐம்பத்து மூன்றாவது ஆண்டு நிறைவையும் அடைகின்றார். ஆயர் அவர்கள் இறை அருளால் ஆரோக்கியத்துடன் நீடு வாழவும், அரும்பணிகள் ஆற்றிடவும் வாழ்த்துகின்றோம், வேண்டுகின்றோம்!

வாழ்த்துகிறோம்!
வேண்டுகிறோம்!


உயிர்ப்பு வரை இயேசுவைப்பற்றி அறிவித்தனர். இறுதியாக, இயேசு பிறக்கும்போதே அற்புதமாகப் பிறந்தார் என்பதைக் கூறுவதற்காக அவருடைய பிறப்பு நிகழ்ச்சிகள் அறிவிப்பில் சேர்க் கப்பட்டன.

இந்த அணுகு முறையானது நற்செய்தி நூல்களில் மிகத் தெளிவாகக் காணக் கிடக்கின்றது. இயேசுவினுடைய வாழ்க்கையைப் பற்றி முதலில் எழுதப் பட்ட மாற்கு நற்செய்தி நூலில் அவருடைய பிறப்பைப் பற்றிய குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை. அவரது அருளடையா ளங்கள், பொழிவுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு பற்றிய செய்திகளே தரப்படுகின்றன.

அடுத்து எழுதப் பட்ட மத்தேயு நற்செய்தி நூலில் இயேசுவின் பிறப்பைப் பற்றி ஓரளவு சுருக்க மாகவும், தொடர்ந்து எழுதப்பட்ட லூக்கா நற்செய்தி நூலில் இன்னும் விரிவாகவும் வாசிக்கின்றோம்.

தொடக்கத் திருச் சபையில் கிறிஸ்துவின் பிறப்போடு தொடர்பு டைய ஞானியர்கள் கீழ்த்திசையிலிருந்து வந்து இயேசுவை வணங்கிய திருக்காட்சிப் பெருவிழா கொண்டாடப் பட்டது. கீழைநாட்டு ஞானியர் பொன், தூபம், வெள்ளைப் போளம் முதலியவற்றை இயேசுவுக்குக் காணிக் கையாக்கினர். பொன் இயேசுவின் அரசத் தன்மையையும், தூபம் அவரது கடவுள் தன்மை யையும் வெள்ளைப் போளம் அவர் மனுக் குலத்திற்காகத் துன்புற இருப்பதையும் சுட்டிக் காண்பிக்கின்றன. இவ்வாறு திருக்காட்சிப் பெருவிழா இயேசுவின் இறப்பிற்கும், உயிர்ப்பின் மாட்சிக்கும் முன்னறிவிப்பாகக் காட்டப்பட்டது.



கிறிஸ்துவம் உரோமைப் பேரரசில் பரவியபோது பிற இனத்து மக்கள் தாங்கள் கொண்டாடிவந்த சூரியக் கடவுளின் பிறப்பு விழாவைக் கிறிஸ்து பிறப்பு விழாவாக மாற்றிக் கொண்டாடினர். உலகின் ஒளியாக - உலகினை ஒளிர்விக்கும் உண்மையான ஒளியாக இயேசு பாவ இருளை அகற்றிப் பரமனின் அரசைப் பூவுலகில் நிலைநாட்ட வந்தவர் எனும் சிந்தனையுடன் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுவோம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- நமது ஆயரின் கிறிஸ்து பிறப்பு விழாச் செய்தி -

## என்னைத் தேட வந்ததேன்....?

**"மனிதனே! நீ என்னை மறந்தாலும் நான் உன்னை மறக்கவில்லை, மறக்க நினைக்கவும் மாட்டேன்"**

என்ற நல்ல செய்தியைக் கொண்டுவந்த மாபரனின் மனித அவதாரம்தான் கிறிஸ்மஸ். 'தீ நடுவே நடந்தாலும், புயல் சூழ்ந்து எழுந்திடும் காரிருளை நீ கடந்திட நேர்ந்தாலும், உன்னோடு நான் இருப்பேன்' என்ற வாக்குறுதிகளுக்கு செயலுருவம் கொடுத்தவரின் பிறப்பு விழாதான் கிறிஸ்மஸ். அன்பென்னும் மழையைப் பொழிந்து, அன்பர்களை அன்பினால் நனைத்து அன்பென்றால் இதுவென்று இலக்கணம் வகுத்தவரின் பிறப்பு விழாதான் கிறிஸ்மஸ்.

வாழுமுன் வரலாறு வகுத்தவர் வரலாற் றில் நுழைந்து, வரலாற்றையே மாற்றினார். ஆறறிவு படைத்த மனிதன் ஐந்தறிவு படைத்த விலங்குகள் போல் வாழ்கின்ற நிலையை மாற்றி, மனிதன் மனிதனை, மனிதனாக மதித்து வாழக் கற்றுக்கொடுத்தார். மனிதன் மிருகமாகவும் முடியும், மனிதனாகவும் வாழமுடியும். புனிதனாகவும் ஆக முடியும். இந்த அடிப்படை உண்மையை ஒவ்வொருவரும் உணர்ந்து தங்களையும் மாற்றி, தங்களைச் சூழ உள்ளவர்களையும் மாற்றி இறையாட்சி விழுமியங்கள் நிறைந்த புதிய



தோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப விரும்பினார். "இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்" (தி.வெ: 21:5) என்ற அவரது செயலார்வம் மிக்க வார்த்தைகள் எம்மையும் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

வாழ்வுக்கும் சாவுக்குமிடையே, அழிவுக்கும் ஆபத்துக்குமிடையே, வீழ்ச்சிக்கும் எழுச்சிக்குமிடையே தடுமாறித் தவித்துக்கொண்டிருந்த உலகிற்கு விடுதலை அளிக்கும் விடிவெள்ளியாக அவதரித்தார். மனிதனை அழிவிலிருந்து விடுவிக்கவேண்டுமானால் தனி மனிதனிலும், சமுதாயத்திலும் அடிப்படையான ஆழமான மாற்றங்கள் நிகழ வேண்டும் எனத் தீர்மானித்தார். மதிப்பீடுகள், சிந்தனைப் போக்குகள், நிலைப்பாடுகள், வாழ்வு முறைகள் போன்றவற்றில் முழுமையான மாற்றங்கள் நிகழாவிட்டால் உலகை எதிர்நோக்குகின்ற அழிவு தவிர்க்க முடியாததாகிவிடும் என உணர்ந்தார்.

மனிதம் சிதைந்து மனித நேயம் மழுங்கடிக்கப்பட்டு, மனித உரிமைகள் மறுக்கப்பட்டு மனுக்குலமே அழிவுப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் அவரது அன்பின் சாயல்களாகிய எமது பங்களிப்பு என்ன என்பதை சிந்திக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.


வார்த்தை மனுவுருவானார். கடவுள் தன்மையைக் களைந்துவிட்டு மனித இயல்பை ஏற்றார். எம்மிலே ஒரு மனமாற்றம். தீய மனத்தை மாற்றி தூய மனதாக்க வேண்டும். பவுலடியார் கூறுவது போன்று "உங்களுடைய முந்தின நடத்தையை மாற்றி தீய நாட்டங்களால் ஏமாந்து அழிவுறும் பழைய மனிதருக்குரிய இயல்பைக் களைந்துவிடுங்கள். உங்கள் மனப்பாங்கு புதுப்பிக்கப்பட வேண்டும்" (எபே 4:22)

**"அன்று கிறிஸ்து பிறந்தது பழைய கதை
இன்று அவர் நம்மில் பிறப்பதுதான் புதிய கதை.
மனிதனை முழு மனிதனாக்க பிறந்தார்
மனிதனிடமுள்ள துயரங்களை
இல்லாதொழிக்க அவர் பிறக்கவில்லை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுகுக் கதை 61



அன்ரன் வேலைவிட்டு வீட்டுக்கு வரும்போது, அவரின் சின்ன மகனின் முகம் வாடிப்போய் இருந்தது.

"மகன் என்ன பிரச்சினை....?"

"அப்பா சித்திரப் பாடத்தில எனக்கு குறைய மாக்ஸ்"

"என்ன நடந்தது....?"

"நீங்க விரும்பிய கற்பனைக் காட்சியொண்ட கீறச் சொல்லியிருந்தாங்க ..... நான் பாலன் பிறப்புக் காட்சிய என்ர 'ஐடியா'வில கீறியிருந்தன்.... பிழையெண்டு புள்ளியக் குறைச்சிப்போட்டாங்க....."

"படத்தக் காட்டுங்க....."




படத்தில் பாலன் படுத்திருந்தார்; சுற்றிவர சூசை, மரியாள், இடையர்கள் ...... என்றெல்லாம் இருந்தனர். ஆனால் எல்லாரும் நவீனம்; மரியாள் சேலை உடுத்தியிருந்தார். சூசை சாறன் உடுத்தியிருந்தார்: இடையர்கள் ஜீன்ஸ் உடுத்தியிருந்தார்கள்: கையில் 'மொபைல்' வைத்திருந்தார்கள்.....

"அப்பா ..... நம்மட பாப்பாண்டவர் கூட நவீன கருத்துகளச் சொல்றார்..... அப்ப நான் கீறினது பிழையா.....?"

அன்ரனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

---


**துன்பத்திலும் அவருடைய பிரசன்னத்தை**
**உடனிருப்பை நாம் உணர்ந்துகொள்ள அவர் மானிடரானார்.**
**மனிதரை ஒளிர்விக்கும் மெய்யொளி எம்மிலே வாசம் பண்ணுகிறார்.**
**ஆனால், நாமோ அவரை வெளியே தேடி அலைகிறோம்.**
**தூங்குகிறவனே, விழித்தெழு!**
**இறந்தவனே, உயிர்பெற்றெழு!**
**கிறிஸ்து உன் மீது ஒளிர்ந்தெழுவார்"**

எம்மைப் புதுப்பிக்க வேண்டி எம் இதயக் கதவுகளைத் தட்டிக்கொண்டிருக்கிறார். நாம் எப்போது எம் இதயக் கதவுகளைத் திறக்கப்போகின்றோம்...? எம்மில் உறைந்து எம்மைப் புதுப்பிக்கும் தூய ஆவியானவருடன் ஒத்துழைக்க வேண்டாமா? எனவே, அனைத்தையும் புதுப்பிக்கும் தூய ஆவியானவருடன் ஒத்துழைத்து புதிதாகச் சிந்திப்போம். கடவுள் எமக்காக ஆற்றும் அளப்பரிய செயல்களைப் புதிது புதிதாய்க் காண்போம். புதிய வானம் புதிய பூமி படைப்போம்.

**பேரருட்தந்தை ஜோசப் பொன்னையா**
**மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media



# மட்டக்களப்பு மறைமாவட்ட மேய்ப்புப் பணிச்சபையின் 3வது வருடாந்தப் பொது அமர்வு – 2014



மட்டக்களப்பு- 'மன்ரேசா' தியான இல்லத்தில் 08.11.2014 அன்று சனிக்கிழமை காலை 7.00 மணிக்குப் பதிவு செய்தலுடனும் 08.30 மணிக்கு மறைமாவட்டக் கொடியை ஆயர் ஏற்றிவைத்தலுடனும் ஆரம்பமானது. மறைமாவட்ட கீதம், மங்கள விளக்கேற்றல், செப வழிபாட்டைத் தொடர்ந்து, பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை S. டக்ளஸ் ஜேம்ஸ் அடிகளால் வரவேற்புரை வழங்கப்பட்டது. தொடர்ந்து மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய கலாநிதி ஜோசப் பொன்னையா தலைமையுரையை நிகழ்த்தினார்.



2014ம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட மனித உரிமை ஆண்டு சம்பந்தமான மீள்பார்வை குழுக்கலந்துரையாடல் மூலம் பெறப்பட்டது. அவ்வேளையில் நடத்தப்பட்ட நிகழ்வுகள் பற்றியும், இன்னும் செய்யப்படக்கூடியவை பற்றியும் கருத்துகள் பெறப்பட்டன. தொடர்ந்து அருட்தந்தை : ஜோயல் இயேசுசபை அடிகளாரால் ''தூய வாழ்வு – நற்செய்தி அறிவிப்புக்கான அர்ப்பணம்'' எனும் உரை வழங்கப்பட்டது. ''இதோ நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்'' எனும் திருவெளிப்பாட்டு வாக்கியத்துடன் ஆரம்பித்த இவர் தொடர்ந்து நற்செய்தி அறிவிப்பு – விசுவாச ஒப்படைப்பு, திருச்சபையின் நற்செய்தி அறிவிப்பு உருமாற்றம், மறைபணியாளர் சந்திக்கும் சோதனைகள் போன்ற தலையங்கங்களாக வகுத்து விளக்கினார். இவ்வுரை பற்றி ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்த ஒன்பது குழுக்களும் கலந்துரையாடலில் ஆய்வுசெய்ய விடப்பட்டன.

தொடர்ந்தது மறைமாவட்ட மேய்ப்புப் பணிச் சபையின் 3வது பொது அமர்வு. அதன் தலைவர் ஆயர் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் ஆரம்பமானது. அவர் தமது தலைமையு ரையில் "திருச்சபையின் திட்டங்களை நிறைவேற்றும் சபையாக இச்சபை இருக்கவேண்டும். திருத்தந்தை சொல்லும் வழியை வரும் ஆண்டு முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அமைப்பு விதிகள் பற்றிய புத்தகம் வெளிவந் துள்ளது. இது நமக்கு உதவி புரியும். வரும் ஆண்டுக்கான செயற்பாடுகளை நாம் நிறைவேற்றிப் பயன்பெறவேண்டும்" என்றார். தொடர்ந்து அருட்தந்தை. மொறாயஸ் அவர்கள் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார். அடுத்து மட்டக்களப்பு, கல்முனை மறைக்கோட்டங்களின் ஆண்டறிக்கைகளும் குருமுதல்வர்களால் முன்வைக்கப்பட்டன.

பின்னர், மட்/மறைமாவட்ட மேய்ப்புப் பணிச் சபையின் கடந்த கூட்டறிக்கை செயலர் திரு. G.J. சாந்தகுமாரால் வாசிக்கப்பட்டுச் சபையில் நிறைவேற்றப் பட்டது. கூட்டறிக்கையில் இடம்பெற்ற விடயங்கள் பற்றிய ஆய்வுகள் இடம்பெற்றபோது சிறியகுருமடம், ஆலையடிச்சோலை பற்றிய விடயங்கள் கலந்துரை யாடப்பட்டன. பொருளாளர் திரு. A. றொபர்ட் வாசித்த பொருளறிக்கை, சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏனைய விடயங்களுக்கான நேரத்தில் மறைபரப்பு ஞாயிறு தினங்களில் நிதி சேகரித்தல், மறைமாவட்ட அவதானிப்புக் குழு அமைத்தல், அன்பியங்கள் பற்றிய நிலைப்பாடு, திருத்தந்தையின் வருகை, அடுத்த வருடத்திற்கான செபம் 'ஓசான்னம்' இல்லத்திற்கு தவக்கால 2ம் ஞாயிறைச் சிறப்பித்தல், ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு துறவற சபை பற்றி வெளியிடத் 'தொண்டன்', 'வெட்டாப்பு' ஆகியன முன்வருதல் ஆகிய விடயங்கள் பற்றிப் பேசப்பட்டது. மரியாயின் சேனை - புதிய கியூறியா ஆரம்பித்தல் பற்றிக் கேட்டபோது அதனை ஆயர் அங்கீகரித்தார். செயலர் நன்றியுரை வழங்கியதைத் தொடர்ந்த இறுதிச் செபத்துடன் மாலை 5.15 மணிக்கு அமர்வு முடிவடைந்தது.




மார்கழிக் குளிரினிலே .....
மாடடைக் குடிசைதனில் .....
மரியன்னை மடியினிலே .....
மனுமகன் தூங்குகின்றான் .....
ஆரிரோராரிரரோ .... 4

பாவிமேல் அன்பு கொண்டு .....
பாவத்தைப் போக்க வந்த .....
பாலகன் இயேசு அவன் .....
பாரினிலே வந்து தித்தான் .....
ஆரிரோராரிரரோ ..... 4

அன்பிற்குத் தந்தை யவன் .....
அணையா ஜோதி யவன் .....
இன்பத்தின் ஊற்றும் அவன் .....
இதயத்திலே குடி கொண்டான் .....
ஆரிரோராரிரரோ ..... 4

பெத்லகேம் பிறந்த வொரு .....
பெருமைசேர் புதல்வ னவன் .....
நித்திலம் காக்க வந்தான் .....
நிலைவாழ்வைத் தந்து நின்றான் .....
ஆரிரோராரிரரோ ..... 4

ஜெ. சீலியன் பிரான்சிஸ்



— மற்றில்டா இராஜேந்திரம் —




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித உரிமைகளும் பெண்களும்....

பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு



மனிதர் என்பது ஆண்களையும் பெண்களையும் உள்ளடக்கும், ஒன்று சேரக் குறிக்கும் ஒரு பொதுவான சொல் அல்லவா? மனித உரிமைகள் என்பதும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவானவைதானே! அப்படியிருக்க ஏன் பெண்கள் என்றும் பெண்கள் உரிமைகள் என்றும் பிரித்துப் பேசவேண்டும் என்று ஒருவர் கேட்கக்கூடும்.

மனித உரிமைகள் *(Human Rights)* என்ற எண்ணக் கரு 1948ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தில் *(Universal Declaration of Human Rights)* தெளிவாக இடம்பெற்றிருந்தது. ஒவ்வொரு தனி நபருக்கும், தனிமனிதருக்கும் உரிய அடிப்படையான உரிமைகள் பற்றி இச்சாசனம் பல உறுப்புரைகளில் கூறியிருந்தது.

எல்லா மனிதரும் சமமானவர்களே என்ற கருத்தின் அடிப்படையிலேயே மனித உரிமைகள் என்பதை அது வரையறை செய்தது.

ஆனால், உண்மையில் மனிதரிடையே வேறுபாடுகளும் வித்தியாசங்களும் உள்ளன. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள், விசேட தேவையுடையவர்கள் முதலிய வெவ்வேறு பிரிவினர் உள்ளனர். பொருளாதார அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகள் மனிதரிடையே உள்ளன. சகலருக்கும் சம வாய்ப்புகள் கிடைப்பதில்லை. வயது, உடல்நிலை முதலியவற்றால் விசேட அக்கறைக்கும் பாதுகாப்புக்கும் உரிமைகளை உறுதிப்படுத்தவும் தேவையான வெவ்வேறுபட்ட மக்கட் பிரிவினர் உள்ளனர். சமூகத்தில் இவர்களது நிலையும் சமூகம் இவர்களை நோக்கும் விதமும் வித்தியாசமானவை: இதனாலேயே இன்று சிறுவர்களின் உரிமையும் பாதுகாப்பும், விசேட தேவையுடையோரின் உரிமைகள், முதியோர் உரிமைகள் என்றெல்லாம் பேசுகின்ற போக்கு உருவாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போலவே, சமூகத்தில் பெண்களது நிலையும் வித்தியாசமானது; வேறுபட்டது. பெண்களை ஆண்களிலும் தாழ்ந்தவர்களாகவும், அந்தஸ்தில் குறைந்தவர்களாகவும் நோக்குதல் பரவலாக எல்லாச் சமூகங்களிலும் காணப்படுகின்றது. அவர்களுக்குச் சம உரிமைகளும் சம வாய்ப்புகளும் கிட்டுவதில்லை; அவற்றை அடைவதற்கு அவர்கள் மேலதிக முயற்சிகளில் ஈடுபட வேண்டியுள்ளது. பல சவால்களைச் சமாளிக்கவேண்டியுள்ளது.

இன்றும் கூட உலகிலுள்ள வறிய மக்கட் தொகையில் பெண்களே கூடுதலானவர்களாயுள்ளனர்: கல்வி, வேலை வாய்ப்புகள் என்பன மிகக் குறைவாகவே இவர்களுக்குக் கிடைக்கின்றன. மதம், கலாசாரம் போன்றவற்றால் அதிகளவில் கட்டுப்படுத்தப்படுகின்றனர். பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிரான வன்முறை பரவலாக நடைபெறுகிறது.

இத்தகைய ஒரு பின்னணியில்தான் பெண்களது உரிமைகள் எனப் பிரித்துப் பேச வேண்டிய ஒரு தேவையேற்பட்டது. மனித உரிமைகள் என்ற எண்ணக்கரு இத்தகைய நிலைமைகளைக் கவனத்தில் எடுக்கவில்லை: எனவே, இதிலுள்ள பெண்கள் உரிமைகள் தொடர்பான போதாமைகளைப் பற்றி அக்கறைப்பட வேண்டும் என்ற கருத்து எழுந்தது. பெண்கள் உரிமைகளிலும் அவர்களுக்குள்ள வித்தியாசமான பிரச்சினைகள் குறித்து அக்கறையுடைய தனிநபர்கள், சமூக அமைப்புகள், பெண்கள் அமைப்புகள் ஒன்று சேர்ந்து பெண்கள் உரிமைகள் மனித உரிமைகளுள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தனர். இது குறித்து உலகளாவிய மனித உரிமை மகாநாடுகளில் பல விவாதங்கள் நடைபெற்றன.

இதன் பயனாகவே, 1993 ஆம் ஆண்டு ஆஸ்திரிய நாட்டின் வியன்னா நகரில் நடைபெற்ற உலக மனித உரிமைகள் மகாநாட்டில் "பெண்கள் உரிமைகள் மனித உரிமைகள்" *("Women's Rights as Human Rights")* என்ற கருத்து தெளிவாக முன்வைக்கப்பட்டது. பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், பாலியல் அடிமைத்தனம், சகலவிதமான பாலியல் தொந்தரவுகளும், சுரண்டல்களும் பற்றியெல்லாம் பலமான கருத்துகள் வெளிப்பட்டன.

பெண்கள் உரிமைகளைத் தனியாக நோக்கி மனித உரிமைகளுக்குள் சேர்த்து விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்மென்பது உறுதிப்பட்டது. இது தவிர ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயங்கள் *(Conventions)* சர்வதேச அளவிலான பெண்கள் மகாநாடுகள் போன்றவற்றின் மூலம் பெண்கள், சிறுமிகள் ஆகியோரின் உரிமைகள், பாதுகாப்பு முதலியவை குறித்த பல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வகையில், மிக முக்கியமானது 1979ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் *(General Assembly)* ஏற்றுக் கொள்ளப்பட்ட "பெண்களுக்கு எதிரான சகல பாரபட்சங்களையும் நீக்குவதற்கான சமவாயம் *(Convention on the Elimination of All Forms of Discrimination against Women)* என்பதாகும். இது சுருக்கமாக சீடோ சமவாயம் *(CEDAW Convention)* என அழைக்கப்படுகிறது.

1975ம் ஆண்டிலிருந்து நிகழ்ந்து வருகின்ற உலகப் பெண்கள் மகாநாடுகளிலும் பெண்கள் உரிமைகள், அபிவிருத்தி பற்றிய கருத்துகள் முன்வைக்கப்பட்டு உறுதிப்படுத்தப் பட்டுள்ளன.

இவற்றில் முக்கியமான மைல் கல்லாக அமைவது, 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகப் பெண்கள் மகாநாடு ஆகும். இத்தகைய பெண்கள் உரிமைக்கான சமவாயங்கள், சர்வதேச மகாநாடுகளில் முன்வைக்கப்பட்ட கருத்துகள் ஆகியவற்றைப் பின்தொகுத்துக் கூறலாம்.

- பெண்களின் சொத்துரிமையும், பொருளாதார உரிமைகளும்
- கல்வி, பயிற்சி ஆகியவற்றைப் பாரபட்சமின்றிப் பெற்றுக்கொள்ளும் உரிமை.
- சுகாதார உரிமைகள் - இனப்பெருக்க *(Reprodutive Rights)* மகப்பேற்று உரிமைகள் உட்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார் என்பது நாம் அறிந்த செய்தி. இயேசு காலத்து யூதர்களின் வீட்டு அமைப்பு பற்றி ஆராயும்போது மாட்டுத் தொழுவத்திற்கான புதிய விளக்கம் கிடைக்கிறது.

யூதேயா மக்கள் முதலில் நிரந்தரமான கூட்டுக் குடியிருப்புகளை மலை முகடுகளில் அமைத்தனர். பின்னர் மலைச்சரிவுகளில் குடியிருப்புகளைக் கட்டி கோட்டைகள் எழுப்பியுள்ளனர். மலை ஓரமாக வாழ்ந்தவர்கள் குழிக ளையும், குண்டுகளையும் தானியங்களைப் பாதுகாக்கும் அரங்குகளாகவும் பெரிய தண்ணீர்த் தொட்டிகளாகவும் பயன்படுத்தினர். மலைமேல் வீடு கட்டியவர்கள் கீழே மலையைக் குடைந்து கல்லையும் மண்ணையும் எடுத்து மேலே வீடு கட்டினர். கல்லும் மண்ணும் எடுக்கப்பட்ட குகைகளில் தானியங்களை வைக்கோலைப் பாதுகாத் தனர். குளிர்நாட்களில் அந்தக் குகைகளிலே தங்கள் கால் நடைகளை அடைத்தனர்.

கால்நடைகளுக்கு உணவளிக்க வீட்டிற்கும் குகைக்குமிடையே ஓர் ஓட்டை போட்டனர். மாடுகள் விடும் வெப்பமூச்சு ஓட்டை வழியாக வீட்டிற்குள் சென்று, குளிர்காலத்தில் வெப்பமாகக் கதகதப்பூட்டியது.

இதுபோன்ற வீட்டிற்குக் கீழே உள்ள குகை - தொழுவமாகப் பயன் படுத்தப்பட்ட குகைதான் இயேசு பிறந்த மாட்டுத் தொழுவக் குகை யாகும்.



# இயேசு பிறந்த மாட்டுத் தொழுவம்

## – ஒரு விளக்கம் –

**கி.வி.சுந்தரிமைந்தன்**

இயேசு பிறந்தபோது, அக்குகைகளில் கால் நடைகளுக்கு உணவும் தண்ணீரும் தர பயன்படுத்தப்பட்ட செவ்வக வடிவத் தொட்டியையே இயேசுவைக் கிடத்தும் தொட்டிலாகப் பயன்படுத்தியிருப்பர். இத் தொட்டிகள் கல்லில் கொத்தப்பட்டிருக்கும் அல்லது களிமண்ணால் செய்யப்பட்டிருக்கும்.

மீட்பர் பிறந்த குகையும் கோவிலும் இன்று ஊரின் நடுவே உள்ளது. ஆனால், இயேசு பிறந்தபோது அதுதான் ஊரின் கிழக்கு எல்லை.

**மனித உரிமைகளும் .... தொடர்...**

- தொழில் / வேலை உரிமைகள்
- சமவேலைக்குச் சம சம்பளம்
- சட்டரீதியாகவும் நடைமுறையிலும் பெண்களுக்கு எதிராகவுள்ள பாரபட் சங்களை நீக்குதல்.
- அரசியலில் பங்கேற்பதற்கான உரிமை
- வீட்டிலும் நாட்டிலும் பெண்கள் ஜனநாயக உரிமைகளை அனுபவித் தல்
- பெண்களுக்கு எதிரான வன்முறை களை இல்லாதொழித்தல்: அவற்றி லிருந்து விடுபடல்: வன்முறைக்கு உள்ளானோருக்குப் பாதுகாப்பும் நீதியும்.
- சிறுமிகளுக்கு *(Girl Child)* எதிரான சகல பாரபட்சங்களையும் நீக்குதல்.
- சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள், துஷ்பிரயோகங்களை நீக்குதல்: அவற்றிலிருந்து பாதுகாப்பு அளித்தல்.

பீஜிங் மகாநாடு நடந்து 20 வருடங்கள் நிறைவுறுகின்ற 2015ஆம் ஆண்டு பெண்கள் உரிமைகள் தொடர்பான முயற்சிகள், நடவடிக் கைகள் அவற்றின் பெறுபேறுகள், வெற்றிகள், சவால்கள், எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராயப்படும். •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அன்னையான ஆசிரியை

பாடசாலை முதலாந் தவணைக்காகத் திறக்கப்பட்ட முதல்நாள், ஐந்தாந் தரத்தின் வகுப்பாசிரியையாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த அமலி தன் மாணாக்கரின் முன் நின்றுகொண்டிருந்தார்.

"உங்கள் அனைவரையும் எனது பிள்ளைகளைப் போலவே நான் நினைக்கிறேன். எல்லோரும் எனக்கு ஒரே சமமானவர்களே"

என்று வழக்கம்போலக் கூறினார். பொய்யாகக் கூறி இருப்பினும் முதல் வரிசையில் தன் கதிரையில் சரிந்து அசட்டையாக உட்காந்திருந்த சிறுவனைக் கண்டதும் அது சாத்தியமல்ல என எண்ண வைத்தது.

அவன் பெயர் தினேஷ். இவனை ஒரு வருடத்திற்கு முன்பிருந்தே தெரியும். அவனை அவதானித்திருக்கிறார். மற்ற சிறுவர்களுடன் விளையாடுவதில்லை. அழுக்கான ஆடைகள். அவன் குளிப்பதுமில்லை எனத் தெரிந்தது. மொத்தத்தில் அவன் அமைதியின்றிக் காணப்பட்டான்.



ஒருநாள், தினேஷின் விடைத்தாளைத் திருத்திய வேளையில் எந்தப் புள்ளியையும் அவன் எடுக்கவில்லை எனக் கண்ட அமலிக்கு அவனிடம் ஒரு ஆர்வம் ஏற்பட்டது. என்ன செய்யலாம் எனச் சிந்தித்தார். முடிவில் அவனது கடந்த வருடங்களுக்கான கோவைகளைப் பெற்று ஆய்வு செய்தார். அவனது கோவைகளைப் பார்த்த ஆசிரியை அதிசயமடைந்தார். தினேஷின் முதலாந்தர, இரண்டாந்தர அறிக்கைகளோ சிறந்த அடைவுகளைக் காட்டின. ஆனால், இரண்டாந்தரக் குறிப்பின் இறுதியில்,



"இவனது தாய் கடுரமாக நோய் வாய்ப்பட்டமை இவனை வருத்தப்பட வைத்துள்ளது" என எழுதியிருந்தது.

அடுத்து 3ந் தர ஆசிரியை,

"இவனுடைய தாயின் மரணத்தை இவனால் தாங்கமுடியாதுள்ளது. அதிலிருந்து மீள இவன் முயற்சித்தாலும் தந்தையின் அக்கறையின்மையால் தடுக்கப்படுகிறது. மிக விரைவில் இவன் சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடில் இவன் பெருந்தாக்கத்துக்கு உள்ளாகக் கூடும்" என எழுதியிருந்தார்.

நாலாந்தரத்தின் ஆசிரியை

"இவன் பாடசாலை வாழ்வில் எந்த வித அக்கறையுமின்றி இருக்கிறான்; இவனுக்கு அதிகமாக நண்பர்கள் இல்லை. வகுப்பில் சிலவேளைகளில் தூங்குவான்" என எழுதியிருந்தார். இவற்றை வாசித்துப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்ட ஆசிரியை அமலிக்குத் 'தான் அவனை இதுவரை அறிந்துகொள்ளாமல், சிலவேளைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடினமாகக்கூட நடந்துள்ளோமே' என நினைக்கையில் வெட்கமாகவும் இருந்தது. வருட இறுதியில் கிறிஸ்மஸ் விழா வந்தது. எல்லா மாணவர்களதும் பொதிகளைக் கண்டதில் இருக்கும் மகிழ்ச்சிக்கு மத்தியிலும் ஏதோ ஓர் உணர்வு உள்ளூரத் தாக்கியது.

ஆமாம், கடைகளில் பொருட்கள் தரப்படும் கபில நிறத் தட்டித்தாளால் சுற்றப்பட்ட தினேஷின் அன்பளிப்பை, வருத்தத்துடன் பிரித்துப் பார்த்தாள். அதனுள் இருந்து ஆசிரியை எடுத்த கைச் சங்கிலியைக் கண்டதும் ஏனைய மாணவர்கள் சிரித்தனர். அதில், கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. பழையது போல. கற்கள் சில கழன்றிருந்தன. அத்துடன் ஒரு வாசனைத் திரவிய போத்தலும் இருந்தது. அதில் கால் பகுதியே எஞ்சியிருந்தது. சிரித்துக்கொண்டிருந்த மாணவர்களை அடக்கி விட்டு,

"ஆஹா, இந்தக் கைச்சங்கிலி மிக அழகாக இருக்கிறது"

என்று கூறியபடி கையில் அணிந்துகொண்டு, வாசனைத் திரவியத்தைக் கைகளில் மெல்ல அடித்துக்கொண்டார். பாடசாலை நேரம் முடிந்தது. மாணவர்கள் சென்றனர். ஆனால், தினேஷ் ஆசிரியைக்காகக் காத்துக்கொண்டு நின்றான். அவரைக் கண்டதும் ஓடிச்சென்று,

"ரீச்சர், நீங்க இண்டைக்குச் சிரிச்ச நேரம், சரியா எண்ட அம்மாவைப்போல இருந்தீங்க"

என்றான். திகைத்துப்போன அமலி, எல்லோரும் சென்ற பின் ஒரு மணித்தியாலம் வரை அழுது தீர்த்தார்.

ஒவ்வொரு நாளும் அமலி, வாசிப்பு, எழுத்து, கணிதம் ஆகியவற்றை அமைதியாகக் கற்பித்தார். மாணவர்களுக்குக் கற்பிக்கும் அதேவேளை தினேஷைக் கொஞ்சம்

- மற்றில்டா இராஜேந்திரம் -



## எண்ணிப்பார்க்கையில் 12

மனிதன் தைரியமானவனென்றால்
எந்தநேரமும் மார் தட்டிக் கொண்டு
கர்ச்சித்துக் கொண்டு
தன் பராக்கிரமத்தைக் காட்டிக் கொண்டு
சமயங்களில் அடாவடியாக
எதையாவது பண்ணிக்கொண்டு
எதிலும் தலையிட்டுக் கொண்டு
இருப்பது என்பதில்லை.
உறுதியாக எண்ணிப் பார்க்கையில்
தைரியம் அமைதியை மனதில் தரும்
எதையும் பொறுமையோடு நோக்கும்
நல்லது தீயதை எடைபோட்டுப் பார்க்கும்
நிதானத்துடன் செயற்பட்டு
ஒன்று பிழைத்துப் போகையில்
தனக்குள்ளே
"சரி நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம்"
என்று சொல்ல வைக்கும் ...
முயல வைக்கும் ....



ஆனந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் மூத்த குருவாக விளங்கும் அருள்தந்தை ஜே.எஸ். அரசரெட்ணம் அவர்கள் கடந்த நவம்பர் திங்கள் 16ம் நாள் தமது 90வது பிறந்தநாளைக் கொண்டாடினார். அடிகளாருக்கு நமது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இறை அருளும் நல் ஆரோக்கியமும் கிடைத்திட வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்!**

அதிகமாகக் கவனிக்கத் தொடங்கினார். அவனருகில் சென்று கற்பிக்கையில் அவனது சிந்தனை உயிர்பெற்றதை அவதானிக்க முடிந்தது. மெல்ல மெல்ல ஊக்கப்படுத்திய போது நல்ல மாற்றம் தெரிந்தது. தினேஷ் இயங்கத் தொடங்கினான். வருட இறுதியில் வகுப்பிலிருந்த சிறந்த மாணவர்களில் இவனும் ஒருவனானான். தொடக்கத்தில் ஆசிரியை கூறிய பொய் மெய்யானது. அனைவரும் ஆசிரியைக்கு வேண்டப்பட்டவர்கள் ஆனார்கள். அவர்களுள் இருந்த அமலியின் செல்ல மாணவர்களுள் தினேஷும் இடம்பெற்றுவிட்டான்.



ஒரு வருடத்தின் பின் தனது வீட்டுக் கதவடியில் ஒரு கடிதத்தைக் கண்டெடுத்தார் அமலி. அது தினேஷின் கடிதம். "நீங்கள் மட்டுமே என் வாழ்நாள் முழுவதிலும் கண்ட சிறந்த ஆசிரியை" என அதில் எழுதியிருந்தான். அத்துடன், அவன் தந்தையுடன் சென்று வேறிடத்தில் கல்வியைத் தொடர்ந்தான்.

ஆசிரியை அமலிக்கு மீண்டும் அவனிடமிருந்து கடிதம் வந்தது. கல்லூரியில் நடைபெற்ற விடயங்களைப் பற்றிக் குறிப்பிட்டுத் தான் மிக விரைவில் பட்டதாரியாகிவிட முடியுமெனவும் தன் நம்பிக்கையை வெளியிட்டபின், அமலியே தன் வாழ்நாளில் கண்ட மிகவும் விருப்பமான, சிறந்த ஆசிரியையாக இன்னும் இருக்கிறார் என்பதையும் குறிப்பிட்டிருந்தான்.

இன்னும் நான்கு வருடங்கள் சென்றன. மீண்டும் அவனது கடிதம், 'தான் பட்டப் படிப்பை முடித்துவிட்டதாகவும், மேலே படிக்க விரும்புவதாகவும் எழுதிய பின் வழக்கம் போல "நீங்களே என் வாழ்நாளில் நான் கண்ட சிறந்த, விருப்பமான ஒரே ஆசிரியை" என்றும் குறிப்பிட்டுக் கையெழுத்திட்டிருந்தான். இத் தடவை இவனது கையெழுத்து நீண்டதாக, தினேஷ் எஸ். அருள்ராஜ். எம்.டி. என வைக்கப்பட்டிருந்தது.

இத்துடன் கதை முடிந்துவிடவில்லை. கோடைவிடுமுறையின்போது இன்னும் ஒரு கடிதம் அவனிடமிருந்து வந்தது. தான் ஒரு பெண்ணைச் சந்தித்ததாகவும், அவளை விரும்பியதாகவும், அவளையே திருமணம் செய்யப் போவதாகவும், இரு வருடங்களுக்கு முன் தன் தந்தை இறந்துவிட்டதாகவும், நீங்கள் சம்மதித்தால் வந்து எனது தாயின் ஸ்தானத்தில் நின்று திருமணத்தினை நடத்தித் தரமுடியும் என்றும் விண்ணப்பம் செய்திருந்தான்.

- தொடர் 23ம் பக்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**கா**சினியில் ஏசுபிரான் உதித்த வேளை
கனிவான பனித்தூறல் மழையின் தாக்கம்
சூசைமுனி அன்னைமரியாளைத் தாங்கி
துயர்மேவ நடைபயின்றார் எல்லை தாண்டி
நீசமகன் ஏரோது பிறக்கப்போகும்
நேசர்யுக மீட்பர் தளிர்ப் பாலன் தன்னை
கூசலின்றிக் கொலைபுரியத் துடித்துநின்றான்
குவலயத்துக் கொளிவரவைத் தடுக்க நின்றான்.

ஏரோதின் தோளினிலே தோல்வி ஏற
இருள் கலையும் நிலைகண்டு மனம் மகிழ்ந்தார்
சீரோங்கும் நிலைதன்னை மக்கள் கண்டார்
செகத்திலினி இன்பமென எண்ணிக் கொண்டார்
தீராத வலிதீரும் துயரம் மாறும்
தித்திக்கும் நிலைசேரும் செழிப்பு மேவும்
ஊரோடு உலகெங்கும் உவகை பொங்கும்
உண்மை நிலை கண்டிறையைத் துதித்தாரெங்கும்

இப்படியாய் மகிழும் நிலை இன்று இல்லை
இரக்கத்தை மறந்தவுள்ளம் விஞ்சும் கல்லை
தப்புகளைச் சரியென்றே புரியும் மாந்தர் - உலக
சனத்தொகையில் அதகமுளார் அவரே வேந்தர்
அப்பாவி மக்களினை ஏய்த்து வாழ்வோர்
அதிகரிக்க. அவர் புனிதர் என்றுமாள்வார்
இப்பாரின் இருள்நிலைமை மாறவேண்டும்
இனிய சுடர்ப் பாலனருள் புரிய வேண்டும்

இத்தனைக்கும் நத்தாரில் இயேசு பாலன்
இம்மண்ணிற் பிறப்பதிலோர் மாற்றம் வேண்டும்
உத்தமத்தாய் வயிற்றினிலே இருந்து பாலன்
உலகத்தை மீட்கவரல் இனிமை, ஆனால்
சுத்தமற்ற யுத்தவெறி கொண்டோர்க்குள்ளும்
சூதோடு வஞ்சனைகள் நிறைந்தோர்க்குள்ளும்
மொத்தத்தில் கொடுந்தீயர் நெஞ்சத்திற்குள்
மோட்சத்து ஒளிப்பாலன் பிறக்கவேண்டும்.

**– நிலாதமிழின் தாசன்**

## திருத்தந்தையின் உரைகளிலிருந்து.....

மத விடுதலை இல்லாதபோது அங்கு நம்பிக்கையும் வழிகாட்டுதலும் இல்லாமல் போகிறது.

மதங்கள் தவறான முறையில் பயன்படுத்தப்படுவது, கடவுளுக்கும் மனித குலத்திற்கும் ஏற்புடையதல்ல என்பதை உணர்ந்து அதனை எதிர்க்க வேண்டும்.

வன்முறையை நியாயப்படுத்தாதீர்கள். வன்முறை, அடக்கு முறைகளைப் பயன்படுத்தும் எந்த ஒரு சமயக் குழுவும் கடவுளின் சேனை எனத் தன்னை அறிவிக்க முடியாது.

மதங்கள் ஒரே குடும்பமாக ஒன்றிணைந்து வாழமுடியும். அது இயலக்கூடியதே!

கடவுளிடம் அளவிடமுடியாத கருணை உள்ளது. அவரின் கருணை மன்னிப்பது மட்டுமல்ல, அதைவிட அதிகமதிகமானது. நாம் கேட்பதற்கு அதிகமாகவே அவரது கருணை கொடுக்கின்றது

உலகச் சந்தை வியாபாரம் பல நாடுகளின் செல்வச் செழிப்பிற்குக் காரணமாக இருந்துள்ள அதேவேளை, அந்நாடுகளில் புதுவிதமான ஏழ்மை நிலை உருவாகவும், மக்களிடையே பொருளாதார இடைவெளிகள் அதிகரிக்கவும் காரணமாக இருந்துள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பன்முகத்தன்மையை ஏற்றுக்கொண்டு பாராட்டுகின்ற மனப்பக்குவம் வேண்டும்

- சர்வ சமய தேசிய மாநாட்டில் தமிழ் நேசன் அடிகளார் -

நாம் வாழும் நாடு பல்லின, பல்சமய, பல்பண்பாட்டு அம்சங்களைக் கொண்ட ஒரு நாடு. இந்தப் பன்முகத் தன்மையை *(Pluralism)* ஏற்றுக்கொள்கின்ற மனப்பக்குவம் இந்த நாட்டில் வாழும் எல்லா மக்களுக்கும் வேண்டும். பல்வகை இனங்கள், மதங்கள், மொழிகள், கொள்கைகள், பண்பாடுகள் ஒரு நாட்டிற்கு அழகையும், வளத்தையும், பலத்தையும் கொடுக்கின்றன. இவற்றை அச்சுறுத்தலாகவோ, ஆபத்தாகவோ பார்க்கக்கூடாது. பன்முகத்தன்மையின் அழகை இரசிக்கத் தெரியாதவர்கள் மனநோயாளிகளே அன்றி வேறுயாருமல்ல என அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தெரிவித்தார்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் முறைமை சார்பு ஆய்வு நிலையத்தில் இடம்பெற்ற சர்வ சமய தேசிய மாநாட்டில் *(Inter Religious National Symposium)* கலந்துகொண்டு உரையாற்றியபோதே மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம் கலையருவியின் இயக்குனரும், மன்னா பத்திரிகையின் ஆசிரியரும், மன்னார் தமிழ்ச் சங்கம் மற்றும் மன்னார் சர்வமதப் பேரவை ஆகியவற்றின் தலைவருமான அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார் தெரிவித்தார். இந் நிகழ்வில் இலங்கையின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த சர்வ மதத் தலைவர்களும் மற்றும் அமெரிக்க நாட்டின் இலங்கைக்கான தூதுவர், நோர்வே நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர். தமிழ் நேசன் அடிகளார் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது, "ஒரு தோட்டத்தில் ஒரே வகையான மலர்கள் →







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media



# கிடைத்த கௌரவம்

- வயவர் சரோஜா -

உலகத் தலைவர்க்கு
வால் நட்சத்திரம்
வழி காட்டிற்று
வரவேற்க .....
பந்தல் இல்லை
கந்தல் இருந்தது
செங்கோல் இல்லை
வைக்கோல் இருந்தது

அவருக்காகக் காத்திருந்தது
பக்த கோடிகள் அல்ல
ஊர்க் கோடியும்
ஓலைக் குடிசையுந்தான்

விலங்குகள் இருப்பிடத்தை
விட்டுக்கொடுத்தன
யாருடைய விலங்குகளை
உடைக்க வந்தாரோ
அந்த மனிதர்கள்தான்
மரத்துப் போயிருந்தார்கள்
இன்று தேவாலயங்களில்
காட்சி அளிப்பது
பழைய கொட்டில் அல்ல
புதிய நாகரீகத்தின் தொட்டில்,
குழந்தை அணிந்திருப்பது
கந்தல் ஆடை அல்ல
பட்டாடை

ஓலைக் குடிலில்
உதித்தவர்க்கு,
உயிர்ப்பால்
கிடைத்தது
கல்லும் சாந்தும்
கலந்து கட்டிய
மாபெரும் கோயில்கள்
உயிருடன் இருக்கையில்
மரத்துப் போன மானிடத்தின்
வெளிப்பாடா இது....?

→ மட்டும் இருந்தால் அது அழகான தோட்டமாக இருக்க முடியுமா? எப்படி பல்வகை மலர்கள் ஒரு தோட்டத்தை அழகு செய்கின்றனவோ அதுபோன்றே ஒரு நாட்டில் பல்வகை இனங்கள், மதங்கள், மொழிகள், கொள்கைகள், பண்பாடுகள் ஒரு நாட்டிற்கு அழகையும், வளத்தையும், பலத்தையும் கொடுகின்றன. இந்த அழகை இரசிக்கத் தெரியாதவர்கள் உண்மையில் மனநோயாளிகளாகத்தான் இருக்க முடியும்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சங்ககாலப் புலவர் கணியன் பூங்குன்றனார் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று சொன்னார். அதாவது "எல்லா ஊரும் என்னுடைய ஊரே, எல்லா மக்களும் என்னுடைய உறவினர்களே" என்றார். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்ச் சமூகத்தில் விளங்கிய உலகளாவிய சகோதரத்துவ *(Universal Brother hood)* சிந்தனை நமக்கு ஆச்சரியம் அளிப்பதாக உள்ளது.

'சமாதானம், சகோதரத்துவம், நல்லிணக்கம் தொடர்பாக எனது நிலைப்பாடு என்ன?' என்று நாம் ஒவ்வொருவரும் நம்மையே நாம் கேட்டுப் பார்க்க வேண்டும். நமது உள்ளத் தில் நாம் ஒவ்வொருவரும் அனுபவிக்காத சமாதானத்தை, சகோதரத்துவத்தை, நல்லிணக் கத்தை நாம் வெளியில் தேடமுடியாது" என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விபுலானந்த அடிகள் எழுதிய கட்டுரைகள் சிலவற்றை கல்வி வெளியீட்டுத் திணைக்களம் 'இலக்கியக் கட்டுரைகள்' என்ற பெயரில் 1973ம் ஆண்டு வெளியிட்டது. அதில் 'சோழ மண்டலத் தமிழும் ஈழமண்டலத் தமிழும்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை உண்டு.

அதில் சுவையான சில பகுதி களைத் தருகின்றேன்.

"..... மட்டக்களப்பு நான் பிறந்த நாடு; ஈழத்தின் கிழக்குப் பாகத்தில்



# இலக்கிய மஞ்சரி

— ஆழியான் —

உள்ளது. அந்நாட்டு வழக்கு மொழி யாழ்ப்பாணத்து வழக்கு மொழியினின்று வேறுபட்டது.

* யாழ்ப்பாணத்தில் அகர வீற்றின் பின்னும் யகரம் உடம்படுமெய்யாகும். காணவில்லை = காணயில்லை. மட்டக்களப்பில் "காணல்ல", யாழ்ப்பாணத்தில் யகரத்தின் முன்னிற்கும் அகரம் ஐ காரமாதல் உண்டு; காணையில்லை.

* மட்டக்களப்பிலே மொழிமுதல் ஒகர ஓகாரங்கள், எகர ஏகாரங்கள் ஆவதுண்டு; சொல்லுங்கள் = செல்லுங்க, போய்விட்டார் = பேய்த்தார் (பெரும்பான்மை முஸ்லிம்களி டையே காணப்படுவது). மட்டக்களப்பு தம்பிலுவில் என்னும் கிராமத்தில் மொழிமுதல் ஐகாரம் எகாரமாதல் உண்டு; மைத்துனன், மைத்துனி = மெச்சான், மெச்சி.

* நன்னூலார் கூறின "கா" என்னும் அசைநிலை இடைச்சொல் மட்டக்களப் பிலே வழக்கில் உள்ளது. இதனை அதிகமாகப் பெண்கள் வழங்குவார்கள். இதனை அவதானித்த புலவன் "ஆடவர் தோளிலுங்கா, அரிவையர் நாவி லுங்கா" என்று கூறினான் என்பதாகக் கேள்வி. ஆடவர் பாற்குடங்களை உறி யில் வைத்துக் காத்தடியின் இருதலை யிலும் கட்டித் தோளில் எடுத்துச்செல்வர். மகளிர் உரையாடும்போது, "என்னகா சொல்றா....? ஏங்கா நீ வரல்ல...? எலக்கா இங்கே சத்து வந்திற்றுப் போ!" என்று இப்படிக் "கா" அசைத்துப் பேசுவது அந்நாட்டு வழக்கம். "எலக்கா..." என்பதிலே கலித் தொகை யில் வரும் 'எல்லா' திரிந்து நிற்பதை நோக்குக.

* ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்கள் யாழ்ப்பாணத்தில் ஒண்டு, இரண்டு (சிறு பான்மை ரண்டு) மூண்டு, நாலு, ஐஞ்சு, ஆறு, ஏளு, எட்டு, ஒன்பது என நிற்பன.

* உடம்படுமெய் யகரம் மொழிமுதல் நிற்கும் ஏகாரத்தின் முன் வருதலுண்டு. ஏன் ஐயா = யேங்யா,

- மொழிமுதல் வகரம் உகரமாதலுண்டு:
  வீடு = ஊடு
- இகரம் எகரமாகத் திரிதல் உண்டு :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிறைய = நெறைய

- 'ஐ' : 'எய்' ஆதல் உண்டு :
  வைகிறாள் = வெய்கிறாள்
- எகரம் ஒகரமாதல் உண்டு :
  பெண்பிள்ளை = பொம்பிள
- 'ஏன்' விகுதி 'அன்' ஆகும் :
  இருக்கிறேன் = இருக்கிறன்,
  வருகிறேன் = வாறன்

உயிர்ப் பின்னோ, இடையின வொற்றின் பின்னோ வருகிற உயிரேறிய ககரம் வடமொழி 'ஹ' போன்ற ஓசையுடையது. இத்தகைய 'ஹ' ஓசை பெற்ற ககரம் வழக்கு மொழியில் கெடும். கெட்டபின் முன் னின்ற உயிர் நீளுதலும் உண்டு. அலைகிறாய் = அலைறாய், அகத்துக்காரர் = ஆத்துக்காரர் (தமிழ்நாட்டு பிராமண மகளிர் வழக்கு), அகமுடையான் = ஆம்பிடையான் இவ்வாறு பல சுவையான அம்சங்கள் அத்தொகுப்பில் உண்டு.

கலைமகள் 19ம் தொகுதி (1941) பக்கம் 82-88 ல் அவற்றை வாசிக்கலாம்.

■



குறும்பா – 144

மரிமாதா ஈன்றெடுத்த பாலா
மறையட்டும் துன்பங்கள் வாவா
சரிபோதும் எனவாழும் நிறைமனது வாய்க்கட்டும்
சகமெல்லாம் நிலைக்கட்டும் அமைதி!

– மெய் –

# தெய்வநீதி ஓங்கல் வேண்டும்

பாவிகளை இரட்சிக்க
பரிசுத்த ஆவியாலே
தேவமைந்தன் மரியவளின்
திருவயிற்றில் பிறப்பெடுத்தும்,
நாதியற்று, இரவுபகல்
நலிந்ததெல்லாம் மக்கள் வாழ்வில்
நீதிபெற்று, மேன்மையுடன்
நிம்மதியாய் வாழ்வதற்கே!

யாரிதனை உணர்ந்தார்கள்?
யாரிதனை அறிந்தார்கள்?
ஏரோது மன்னனவன்
இயேசு பிறப்பறிந்தும்
"ஏதேது என் தலையில்
இடிவந்து விழுந்த" தென்று
தாவீதின் மகனைக் கொல்ல
தந்திரமாய்ச் செயல்பட்டான்.



மனுக்குலத்தின் நன்மைக்காக
மனம்திருந்தும் வாழ்வுக்காக
தனது வாழ்வை அர்ப்பணித்து
தன்னிளமை வயதிலேயே
தலையில்முள் முடியைத் தாங்கி
தரணிமீது சிலுவை தூக்கி
கசையடியும் பட்டுமாய்ந்து
கர்த்தர் இயேசு தெய்வமானார்!

அறியாமை இருளகற்ற
அனுதினமும் பாடுபட்ட
கிறிஸ்துவின் மனம்குளிர
குவலயத்தில் நாமென்செய்தோம்?
அறியாமை இருளில் இன்றும்
அந்தகராய் வாழ்வதற்கா
கிறிஸ்தவராய் வாழ்கின்றோம்?
கேவலமாய்ப் போனோம் நாம்

■ – செ. குணரத்தினம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிநாய் படலம்

(01) “ஐயோ.... என்னைக் காப்பாத்துங்கோ .... ஐயோ என்னை .......”

வீதிப் பக்கத்திலிருந்து ஈனக் குரலொன்று தெளிவின்றி மங்கலாகக் கேட்டது.

கேற்றடியில் வீமன் இடைவிடாமல் குரைப்பதனால், அந்த அவல ஒலி மந்தகாசமாகக் கேட்டிருக்க வேண்டும்.

இவன் எழுந்துபோய் வீமனைக் கூப்பிட்டான். அது விசுவாசத்துடன் வாலையாட்டிக் கொண்டு இவனண்டை வந்துநின்று குழைந்த போதும், இடையிடையே மெதுவாக உறுமிக் கொண்டேயிருந்தது.

குரலுக்குரிய ஆளெவரையும் காணவில்லை. மேசை ஒன்று மட்டும் முள்முருக்க மரத்தடியில் இருந்தது.

இவன் அண்ணாந்து மேலே பார்த்தான்.

அவன் தன்னை ஆசுவாசப்படுத்த அவகாசம் தேடிக்கொண்டான் போலும். அரவமின்றி மரத்திலிருந்து மேசையில் காலூன்றி இறங்கிக்கொண்டிருந்தான்.

ஆபத்திலிருந்து தன்னைக் காக்க முள்முருக்கென்று தெரியாமலே ஏறியிருப்பான் போலும். வலி தெரிந்ததும் அவதானமாக இறங்கவேண்டிய நிர்ப்பந்தம். அதனால் குரல் கொடுக்காது விட்டிருக்கலாம். இவன் நாயைக் கட்டுக்குள் கொண்டுவந்ததால் பயம் போயிருக்கலாம்.

அவனது கைகளிலும் மார்பிலும் இரத்தக் கசிவு தெரிந்தது. அவன் வந்த கோலம் பரிதாபமாக இருந்தது.

இவன் தனது தாயை நொந்து கொண்டான். சந்தைக்குப் போகின்ற அவசரத்தில் அவன் அதனைக் கட்டிப்போட மறந்திருக்க வேண்டும்.


அரிதாரம் பூசிய மேனி மினுக்கிலிருந்து, இரவு காத்தவராயன் கூத்தாடியவர்களில் அவனும் ஒருவன் எனப் புரிந்தது.

அடங்கிப்போன பாவனையிலிருந்தாலும், இடையிடையே குரலை உயர்த்தி உறுமியபடி அவனை எச்சரித்துக்கொண்டே இவன் பின்னால் நின்றது வீமன்.

அவன் நன்றியுடன் இவனைப் பார்த்துப் புன்னகைத்தான். ஆயினும் திகில் அவனைவிட்டு நீங்கியபாடில்லை.

‘மெத்த நன்றி ஐயா!
இதைக் கட்டிப்
போடுங்க ....
போற






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாற எல்லாருக்கும் இடைஞ்சல் இல்லையா....?''

அவன் விநயமாகக் கேட்டுக்கொண்டான்.

காலையில் வீதி வழியே வந்த முதல் வேற்றாள் அவனேயெனப் புரிந்துகொண்டவனாக 'ஆம்' என்பது போல் தலையாட்டினான், இவன்.

நல்லவேளை, மேசையும் முள்முருக்கும் கைகொடுத்ததால் அவன் தப்பினான். வேறெவராவது வந்திருந்தால் ... என நினைத்தபோதே மனது கனத்தது.

(02)

சுவரேறிக் குதித்த திருடனுக்கு, அந்த வீட்டில் ஒரு கடிநாய் இருக்கிற விஷயம் தெரியாது போலும்.

'பொலிஸ்' எப்போதும் மௌனமாகவே கண்காணிப்பிலிருக்கும். அது எங்கேயிருந்து எப்படிப் பாயுமென்பதும் அறிந்தவர்க்கு மட்டுமே தெரிந்த விஷயம்.

வீட்டுக்கு வந்துபோய்ப் பழகிக்கொண்டிருப்பவர்களிடம் அது சாதுவாக இருக்கும். அவர்கள் அங்கு வருவது தனக்கும் தெரியுமென்பதுபோல் சிறு உறுமலை மட்டும் வெளிப்படுத்திவிட்டு, மீண்டும் அமைதி காக்கும்.

இரவு சுமார் மூன்று மணியளவில் அவன் அங்கு வந்திருக்கவேண்டும். அதுதான் எவருக்கும் நித்திரை ஆட்டிப் படைக்கும் நேரம் என்பதைத் தெரிந்திருப்பான் போலும்.

'குரைக்கிற நாய் கடிக்காது' என்று வழக்கிலுள்ள வார்த்தையை மெய்ப்பிப்பதுபோல், இது ஆர்ப்பாட்டம் பண்ணாத நல்லதொரு விசுவாசி என்பதைத் திருடன் எப்படி அறிவான்....?

இரகசியப் பொலிஸ் போல் மௌனமாயிருந்து காரியமாற்றுவதால்தான் இதற்குப் 'பொலிஸ்' என்று பெயர் வைத்தார்களாம்.

ஓரளவு வளரிளம் பருவத்தில், எங்கிருந்தோ எவராலோ விரட்டப்பட்டதால் எப்படியோ இங்கு வந்து இந்தக் குடும்பத்துடன் ஒட்டியிருக்கலாம்.

கள்வன் சுவரேறிக் குதித்த சத்தம் கேட்டதுதான் தாமதம், அது பெருங் குரலெடுத்துக் குரைத்தவாறே பாய்ந்து சென்று பிடிக்க முயன்றிருக்கவேண்டும்.

வந்தவன் தனது நோக்கம் மறந்து,

''நாயைப் பிடியுங்கோ ..... ஐயோ ... நாயைப் பிடியுங்கோ.....''

என்று குரலையிட்டுக் கொண்டே மீண்டும் மதிலேற முயல்வதற்குள் அது சாரனைப் பற்றி இழுத்திருக்க வேண்டும்.

மின் குமிழ்களை ஒளிரவிட்டு வெளியே வந்து பார்த்தபோது, தான் வாயில் கவ்வியிருந்த சாரனுடன் மதில்மேல் பாயமுடியாது தத்தளித்தபடி ஏமாற்றத்துடன் நின்றிருந்தது.

அந்த ஆறடி உயர மதிலின்மேல், அரையில் உள்ளாடை மட்டுமே கொண்ட அரைநிர்வாணப் பக்கிரியாக நின்று அவன் கூச்சலிட்டான்.

''ஐயா... என்ர சாரனைத் தாருங்கோ... இனி இந்தப் பக்கமே தலை வச்சுப் படுக்கமாட்டன்....''

என்று கெஞ்சியபடி நின்றான், திருட வந்ததை முற்றிலும் மறந்தவனாக. □





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரை விமர்சனம்




அன்பை, கோபத்தை, அக்கறையை, நட்பை, காதலை வெளிப்படுத்த வார்த்தைகள் தேவையே இல்லை என்று சொல்ல 'வாயை மூடி பேசி'யிருக்கிறார்கள் பாலாஜி மோகனின் படையினர்.

மனதை விட்டுப் பேசுங்கள், மனதில் உள்ளதை மறைக்காமல் பேசுங்கள்; எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும் — இதுதான் படத்தின் ஆதாரமான செய்தி. இந்தச் செய்தியைத் துளிக்கூட சீரியஸ் தன்மையோ வன்முறையோ இல்லாமல் அழகான மலைப் பிரதேசத்தின் பின்னணியில் மெல்லிய சாரலாய்த் தெளித்திருக்கிறார் இயக்குநர்.

பேச வேண்டியதைப் பேசாமல் போனால் என்ன ஆகும்? தேவையே இல்லாமல் பேசினால் என்ன ஆகும்? சத்தமாகப் பேசாமல் இருந்தால் என்ன நடக்கும்? – சில துணைக் கதைகளின் உதவியோடு இதையெல்லாம் பேசுகிறார் இயக்குநர்.

பனிமலை என்கிற மலைக் கிராமத்தில் குரல் இழப்பு உண்டாகும் வித்தியாசமான நோய் பரவுகிறது. நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்படும் வரை ஊருக்குள் யாரும் பேசக் கூடாது என்று தடை உத்தரவு விதிக்கிறது அரசு. அந்த 'மௌன யுகத்தில்'வானொலி அறிவிப்பாளர் கனவில் இருக்கும் துல்கர் சல்மான் (அறிமுகம்), பிடிக்காத திருமணத்தை மறுக்க முடியாத நஸ்ரியா, நியூக்ளியர் ஸ்டாருக்காக முட்டி மோதிக் கொள்ளும் இளைஞர்கள், குடும்பத் தலைவியாகத் தன்னைச் சுருக்கிக்கொண்ட எழுத்தாளர் மதுபாலா, சுகாதாரத் துறை அமைச்சர் பாண்டியராஜன் என ஆங்காங்கே உள்ள ஸ்மைலி ஸ்டிக்கர்கள் நன்றாக உள்ளது.

'காதலில் சொதப்பி'க் கவனம் ஈர்த்த பாலாஜி மோகன், இந்த முறை "பேசாமல் சொதப்புவது எப்படி" எனக் காட்டியிருக்கிறார். ஒரு கலாட்டா கற்பனையில் மனிதர்களின் உறவுச் சிக்கல்கள், சினிமாப் பித்து, ஊடக உள்குத்து, அரசியல் கலவரம்... எனப் பல விஷயங்களை பார்சல் செய்திருக்கிறார். முதல் பாதி முழுக்கப் பேச்சு, இரண்டாம் பாதியில் மௌனம் என வித்தியாசமான முறையைக் கொண்டுவந்தது சூப்பர். ஆனால், எந்த அழுத்தமும் இல்லாமல் ஒவ்வொரு சம்பவமும் கடப்பது கலக்கம் தான்.

துறுதுறு பட்டாம்பூச்சியாகப் பார்த்துப் பழகிய நஸ்ரியா, இதில் சோகம் ததும்ப வலம் வருகிறார். 'எனக்கு மாடர்ன் டிரெஸ் ஓ.கேவா?' எனக் கேட்கும் இடத்தில் மட்டும்... 100 வீத பிரகாசம்! கண்ணைப் பறிக்கின்றது.

பேச்சைப் பறிக்கும் நோய் இவர்கள் ஒவ்வொருவரையும் எப்படிப் பாதிக்கிறது என்பதை வேடிக்கையாகச் சொல்ல முயன்றிருக்கிறார் பாலாஜி. முதல் பாதி முழுவதும் பேசிப் பேசிக் கலகலப்பூட்ட முயல்கிறார். அரசியல்வாதியைக் கிண்டல் செய்வது, ரசிகர் மன்றத்தைக் கேலி செய்வது, செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

நிறுவனங்களைக் கிண்டலடிப்பது என எல்லாவற்றிலும் காமெடி எல்லை மீறிச் சென்று சில இடங்களில் சிரிக்க வைக்கிறது.

துல்கர் சல்மானின் துறுதுறுப்பும் நஸ்ரியாவின் அமைதியும் படத்தின் பலம். சல்மான் பாத்திரத்தை உணர்ந்து சிறப்பாகச் செய்திருக்கிறார். மெல்லிய சோகத்துடன் நடமாடும் பாத்திரத்தில் நஸ்ரியா கவர்கிறார். நீண்டநாள் கழித்துத் திரையில் தலை காட்டியிருக்கும் மதுபாலா 1990களில் பார்த்தது போலவே இருக்கிறார். மௌனமாகப் பேசும் காட்சிகளில் நஸ்ரியாவும் மதுபாலாவும் தங்கள் விழி மொழி மூலம் தனித்து நிற்கிறார்கள்.

இரண்டாம் பாதியில் வசனங்கள் இல்லாமல் கதையை நகர்த்த வேண்டியிருக்கும் சவாலில் ஜெயிக்கிறார் இயக்குநர். இந்த மௌனத்தைத் தன் இசையால் மொழியாக்கம் செய்திருக்கிறார் சியன் ரால்டன். மலைப் பிரதேசத்தை அழகாகக் காட்டி நம் கண்களுக்குக் குளிர்ச்சி தருகிறார் ஒளிப்பதிவாளர் சௌந்தரராஜன்.

படத்தின் ஆதாரமான கேள்விகள் அனைத்துக்குமான பதில்கள் உடனடியாகத் தெரிந்துவிடுவதால் படத்துடன் ஒன்ற முடியவில்லை. அடுத்து என்ன என்ற கேள்வியே எழ வாய்ப்பில்லை. கிண்டலையும் சில நெகிழ்ச்சியான




தருணங்களையும் மட்டுமே நம்பிப் படத்தை நகர்த்தியிருக்கிறார் பாலாஜி. படத்தின் பலமும் பலவீனமும் இதுதான்.

எதிர்பார்க்கும் சம்பவங்கள் எதிர்பார்க்கும் விதத்திலேயே நடந்து முடிகின்றன. இதற்கு ஏன் அந்த 'மௌனப் புரட்சி'?

உரிய நேரத்தில் தக்க விடயத்தை தகுந்த நேரத்தில் பேசுவோம். பேசுவதால் சில பிரச்சினைகளை சுமூகமாகத் தீர்த்து விட முடியும் என வாயை மூடிப் பேசியிருக்கிறார்கள் ..... நல்ல வேளை "வாயை மூடிச் சொதப்பவில்லை" பாலாஜி மோகனின் கும்பல்....

## அன்னையான ஆசிரியை ....

அமலி மறுக்காது ஏற்றுக்கொண்டார். அதுமட்டுமல்ல, தினேஷ் அவருக்கு வழங்கிய அவன் தன் தாயுடன் இறுதியாகக் கொண்டாடிய கிறிஸ்மசின்போது அணிந்திருந்த தாயின் கைச் சங்கிலியை அணிந்து கொண்டும், அவனது தாயின் வாசனைத் திரவியத்தை அடித்துக்கொண்டும் சென்றார். அங்கு ஒருவரையொருவர் அணைத்து வாழ்த்திக்கொண்டனர்.

"நன்றி ரீச்சர், என்னில் நம்பிக்கை வைத்ததற்கு. அதுமட்டுமல்லாது என்னில் அக்கறை எடுத்து நான் மாறமுடியும் என எனக்குக் காட்டியவர் நீங்களே"

என்ற தினேஷைப் பார்த்துக் கண்களில் கண்ணீர் மல்க,

"தினேஷ், நீ தவறாக எடுத்துவிட்டாய், நீதான் எனக்கு மாணவர்களிடம் மாற்றங்களை உருவாக்க முடியும் எனக் காட்டியவன். உன்னைச் சந்திக்கும் வரை, எப்படிக் கற்பிப்பது என்று நான் அறிந்திருக்கவில்லை"

என்றார் அமலி.

இன்று தினேஷ் ஒரு பிரபல்யமான வைத்தியர். ஒரு புற்றுநோய் வைத்தியசாலையைத் தன் தந்தையின் பெயரில் நடத்தி வருகிறார்.

(இக்கதை ஓர் உண்மை நிகழ்வினை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவதாயாரிடம் சரணடைவு....

மயக்க நிலைக்கான முகமூடி அணிந்தாயிற்று
கண்விழித்த வேளை பத்தாம் இலக்க வாட்டில்
கட்டிலைச் சுற்றி உறவினர். நண்பர்கள்
கைகளில் ஆப்பிள் ஒறேஞ், அங்கர் பக்கட்
இப்போது செபமாலையில் சிக்கலில்லை!
தேவமாதாவில் பக்தியானது கூடியது!
தன்னைப் பிழைக்க வைத்த டாக்டர் குழு
மற்று ஏனையோர்க்கு நன்றியுடன்
தேவதாயைப் பார்த்துக் கண்கலங்க செபமாலை
தியானிக்கின்றார்....
சண்ட மாருதமாய் வந்த நோயை
கண்ட இடமின்றிச் சுகமாக்கிய
தேவதாயை சரணாகதி அடைந்தார்
சந்தணத்தார்!

**– கலைக்கோட்டன் அ. இருதயநாதன் –**

சந்தணத்தாருக்குச் சலக்கடுப்பு!
அதை அவரே தேடியது...
போதனா வைத்தியசாலையில்
அவசர சத்திரசிகிச்சை ஏற்பாடு!
சந்தணத்தார் சகல மாதாக்களையும்
புனிதர்களையும் கூவி அழைக்கின்றார்.
இவரது கூவுதலால்,
தலைக்கோழி சாமத்தில்
நேரத்திற்கு முன்பே கூவிவிட்டது!
எதையோ தேடுகின்றார்!
"என்னையா தேடுறீங்க" - நர்ஸ்
"இல்லம்மா எண்ட செபமாலை!!"
"இதுதானே....!"
நாலைந்து புரிபோல
பின்னிப் பிணைந்து சிக்குண்ட செபமாலை
செபமாலை சந்தணத்தாரிடம்,
'மகனே சந்தணம் என்னைப்
பத்திரமாகத்தான் வைத்துள்ளாய்!
பரவாயில்லை!!
தினமும் நீ என்னைத் தியானித்திருந்தால்,
நானும் சிக்குண்ட நிலையில் இருக்கமாட்டேன்
நீயும் சிக்கலில் சிக்கியிருக்கமாட்டாய்!
கவலைப்படாதே! நான் என்றுமே உன்னோடுதான்!'
சந்தணத்தாருக்குக் கண்கள் பனிக்கின்றன!
லைற் ஓன் ஆகியது



# உன்னதமான குருத்துவம்

அழைத்தார் என்னையவர் பணியைத்
தொடர்ந்திட தேர்ந்தெடுத்தா ரென்னையவர்
மக்களை மீட்டிட செய்திடவே
னென்பணியை என்றும் சிறப்புற
ஊரெல்லாம் சென்றிடுவேன் அவர்
பெயரைச் சாற்றிட
உலகமெலா மொளிர்ந்திடவே னான்மீக
மெனுமொளியில்,
அழித்திடுவேன் தூய்மையற்ற
வாழ்வினையே, சென்றிடுவேன்
நீதியெனும் நல்வழியில்,
அமைத்திடுவேன்
அழைத்தலெனும் நல்வாழ்வினை,
நாளும் ஜெபித்திடுவேன்
இறைபுகழைக் கரம்பிடிப்பேன்
செபமாலை எனும்முத்துக் களிலென்றும்
வேண்டிடுவேன் வாழ்வுதரும் ஆண்டவரை
நானே!



**நல்லரெட்ணம் நிதுர்ஷன் - தரம் 11, சிறிய குருமடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




– மற்றில்டா இராஜேந்திரம் –

## மார்கழி 01ம் திகதி : புனித புளோரன்ஸ்



சின்ன ஆசியாவில் பிரிஜியாவிலிருந்து செலுசியா செல்லும் பாதையில் வசித்த ஓர் உரோம் நாட்டுக் குடிமகனுக்கு மகளாக அவதரித்தார். புனித ஹிலரியை இவரது செலுசியா நோக்கிச் சென்ற பயணத்தின்போது சந்தித்தார். ஆயரிடம் சென்று தனக்குத் திருமுழுக்கு வழங்குமாறு கேட்டார். அத்துடன் அவரைப் பின்பற்றி அடுத்த வருடம் பொய்ட்டோ திரும்பினார். அதன்பின் துறவை மேற்கொண்டு, தன் துறவு வாழ்வில் கொம்லே, வியன்னி, பிரான்ஸ் ஆகிய இடங்களுக்குத் தனியாகச் சென்றார். தனது எண்ணங்களை அல்லும் பகலும் இறைவனுடன் பகிர்ந்து சாத்தானின் தாக்குதலுக்கெதிராகப் பல தவ முயற்சிகளை மேற்கொண்டார். இறுதியில் கடுந்தவமுயற்சி காரணமாகக் களைப்படைந்த இவர் 366ம் வருடம் தமது இருபத்தொன்பதாவது வயதினிலே இறையடி சேர்ந்தார். இவரது திருப்பண்டங்கள் போய்ட்டியர்ஸ் மறைமாவட்டப் பேராலயத்திற்குப் பதினொராம் நூற்றாண்டில் இடமாற்றம் செய்யப்பட்டது.

## மார்கழி 02ம் திகதி : புனித பிபியானா



இவரது வாழ்க்கை பற்றிய செய்திகள் கிடைக்காதபோதும் இவரது பிற்பகுதி பற்றி அறியமுடிகிறது. 363ம் வருடம் ஜூலியன், அப்ரோனியனஸ் என்பவனை உரோம் நகர ஆளுநராக ஆக்கினான். இவனால் உருவாக்கப்பட்ட வேதகலாபனையில் பிபியானா துன்புறுத்தப்பட்டார். இவரது பெற்றோர் கிறிஸ்தவர்கள். உரோமைய வீரரான பிளேவியன் இவரது தந்தை ஆவார். இவரது தாயின் பெயர் டப்ரோசா என்பதாகும். பிளேவியன் துன்புறுத்தப்பட்டு நாடுகடத்தப்பட்டார். அங்கேயே காயங்கள் காரணமாக மரணமடைந்தார். தாயோ சிரச்சேதம் செய்யப்பட்டார். அவர்களது இரு புதல்வியரான பிபியானாவும், டிமெற்றியாவும் சவுக்கால் அடிக்கப்பட்டனர். அவர்களது சொத்துகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. வறுமையில் வாடினர். இருந்தபோதும், அவர்கள் தம் இல்லத்தைவிட்டு வெளியேறாமல் தங்கியிருந்து நேரம் முழுவதையும் உண்ணாதிருந்து செபிப்பதில் கழித்தனர். அப்ரோனியனஸ் பட்டினியில் கிடக்கச் செய்தும் எந்தத் தாக்கமும் அவர்களில் காணப்படாததை அவதானித்து அவர்களைத் தன்னிடம் அழைத்தான். டிமெற்றியா தன் விசுவாசத்தை அறிக்கையிட்டபின் கொடுங்கோலனின் காலடியில் வீழ்ந்து இறந்தார். பிபியானா சகலவிதமான கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்டார். ஒரு தீய வழி வாழும் பெண்ணான ருபினாவிடம் ஒப்படைக்கப்பட்டபோது, சமயத்தைவிட்டு விலகச் செய்யத் தன்னால் இயன்றளவு துர்ப்புத்தி கூறி முயற்சித்தாள். ஆனால், அக்கிறிஸ்தவக் கன்னியோ விசுவாசத்தை இழக்கவில்லை.இவரது உறுதியான நிலை கொடுங்கோலனின் கோபத்தை அதிகரிக்கவே, தூணில் கட்டிவைத்து, ஈயக் குண்டுகள் இணைக்கப்பட்ட சாட்டையினால் மரணிக்கும்வரை அடிக்கக் கட்டளையிட்டான். மகிழ்ச்சியோடு சித்திரவதைகளைச் சகித்துக்கொண்ட பிபியானா மரண தண்டனையை நிறைவேற்றுபவனின் கரங்களில் உயிரை நீத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர்களே!
## புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு பழைய மாணவர் சங்கம் உங்களை அழைக்கிறது.

புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர்களாகிய உங்களைத் தன்னுடன் ஓர் அங்கத்தவனாக இணைத்துக்கொள்ள புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு பழைய மாணவர் சங்கம் விழைகின்றது. தற்கால சூழ்நிலைகளுக்கு முகம் கொடுத்து, எமது கல்லூரி நிறுவனங்களையும், கல்விக் கூடங்களையும் பாதுகாத்துக் கொள்ள உங்கள் ஆதரவு அவசியமானது.

அதன் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் உங்கள் பங்களிப்பு என்றும் இருப்பதை உறுதி செய்யுங்கள். 140 வருடங்களுக்கும் மேலான வரலாறு கொண்ட எமது கல்லூரி தொடர்ந்தும் தனது புகழை மங்காது காக்க பங்காளர்களாக மாறி ஒத்துழைப்புத் தாருங்கள். உங்களைக் கல்வி அறிவூட்டி வளர்த்துவிட்ட தாயாம் புனித மிக்கேல் கல்லூரியை உயர்வடையச் செய்வது உங்கள் கைகளில்தான் தங்கியிருக்கிறது என்பதை மறக்க வேண்டாம்.

ஆயுட்கால உறுப்பினராக இணைந்துகொள்ள ரூபா.5000.00 செலுத்தினால் போதுமானது. அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளப் புகைப்படத்துடன் ரூ.100.00 செலுத்த வேண்டும். அவ்வளவுதான்.

புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு பழைய மாணவர் சங்கத்தில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைப் பெற்றுக் கொளளமுடியும்.

| | |
|---|---|
| I.J. சில்வெஸ்டர் | - 077 3534160 / 065 3648154 |
| A.A.G. இராஜேந்திரம் | - 077 1323577 / 065 2224677 |
| E. பிரபு | - 077 1179501 / 071 2307588 |

வணபிதா. போல் சற்குணநாயகம் இ.ச,
தலைவர்

## புனித மிக்கேல் கல்லூரி பழைய மாணவர் சங்க 108வது பொதுக்கூட்டம்

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 108வது பொதுக் கூட்டம் கடந்த 19.10.2014 அன்று காலை 07.30 மணி அளவில் விசேட திருப்பலியின் பின் ஆரம்பமானது. முன்னாள் தலைவர் அருட்தந்தை டோமினிக் சாமிநாதன் அடிகளின் தலைமையில் ஆரம்பமான பொதுக் கூட்டத்தில் கல்லூரி முதல்வர் திருமதி. C.S. மாசிலாமணி, இயேசுசபை மேலாளர் அருட்தந்தை போல் சற்குணநாயகம், கல்லூரியின் உதவி அதிபர் அருட்தந்தை ரஜீவன் அடிகள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த ஆண்டின் கல்லூரி அடைவறிக்கை, சங்க நடவடிக்கைகள், மேலதிக கல்லூரி மற்றும் பழைய மாணவர் சங்க அபிவிருத்தி என்பன கலந்துரையாடப்பட்டன.

தொடர்ந்து 2014/2015 ஆண்டின் சங்க புதிய நிருவாகம் தெரிவுசெய்யப்பட்டது. தலைவராக அருட்தந்தை போல்சற்குணநாயம் அடிகளும், பொதுச் செயலாளராக திரு. I.J. சில்வெஸ்டர், பொருளாளராக திரு. T. நிர்மலன், விளையாட்டு மற்றும் சமூக செயல்பாட்டு செயலாளராக திரு. F. பெலிசின் கல்வி நடவடிக்கைச் செயலாளராக திரு. N. புஷ்பாகரன் மேலும் நிர்வாக சபை உறுப்பினர்கள், கணக்காய்வாளர்கள் முறையே தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

புதிய நிர்வாகம் எதிர்வரும் காலத்தில் அர்ப்பணிப்போடு செயல்படும் என்ற நம்பிக்கை தமக்கு உள்ளதாகக் கூறிய புதிய தலைவர் பழைய மாணவர்கள் எல்லோருமே கல்லூரியில் பற்றுள்ளவர்களாக மாறி செயற்படல் வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

பரிசுப் போட்டி

முடிவுத் திகதி 31.12.2014

# விவிலியம் கற்போம் – 138

**யோசுவா – அதிகாரங்கள் 19, 20**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

இரண்டாவது சீட்டு சிமியோனின் குலத்தாருக்கு அவர்கள் குடும்பங்களின்படி விழுந்தது. அவர்களது உரிமைச் சொத்து யூதா மக்களின் பங்கிற்கு நடுவில் அமைந்திருந்தது. அவர்களுக்கு உடைமையாகப் பதின்மூன்று நகர்களும் அவற்றின் சிற்றூர்களும் நான்கு நகர்களும் அவற்றின் ..................... இவைகளன்றி தெற்கே இராமாது எனப்படும் பாகலாத்பெயிர் வரையுள்ள நகர்களும் அவற்றின் சிற்றூர்கள் அனைத்தும் சிமியோன் குலத்தாருக்குக் கிடைத்த உரிமைச் சொத்து. மூன்றாவது சீட்டு செபுலோன் குலத்தாருக்கு விழுந்தது. ..................... நகர்களும் அவற்றின் சிற்றூர்களும் கிடைத்தன. நான்காவது சீட்டு இசக்காரின் மக்களுக்கு விழுந்தது. பதினாறு நகர்களும் அவற்றின் சிற்றூர்களும் கிடைத்தன. ஐந்தாவது சீட்டு ஆசேர் குலத்திற்கு விழுந்தது. இருபத்திரண்டு நகர்களும் அவற்றின் சிற்றூர்களும் இவர்களுக்குக் கிடைத்தன. ..................... சீட்டு நப்தலியின் மக்களுக்கு விழுந்தது. பத்தொன்பது நகர்களும் அவற்றின் சிற்றூர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. ஏழாவது சீட்டு தாண் மக்களுக்கு விழுந்தது. தாண் மக்களுக்கு வழங்கப்பட்ட பகுதிகளின் எல்லை ஒடுக்கமாக இருந்ததால், ..................... முற்றுகையிட்டு அதற்குத் தாண் எனப் பெயரிட்டு வாழ்ந்தனர். நாட்டுக்கு எல்லை வகுத்து அவரவர்களுக்கு உரிமைச் சொத்து வழங்கிய பின், நூனின் மகன் யோசுவாவுக்குத் தங்கள் நடுவில் உரிமைச் சொத்து வழங்கினர். எப்ராயிம் மலை நாட்டில் அவர் கேட்ட நகரான திம்னத் செராவை ..................... கட்டளைப்படி கொடுத்தனர். அந்நகரைக் கட்டியெழுப்பி அதில் அவர் வாழ்ந்தார். இவ்வாறு குரு எலயாசர், நூனின் மகன் யோசுவா, இஸ்ரயேல் குலங்களின் முதுபெரும் தலைவர்கள் ஆகியோர் இவற்றை இஸ்ரயேல் மக்களின் குடும்பங்களுக்கு உரிமைச் சொத்தாகச் சீலோவில் ஆண்டவர் முன் ..................... வாயிலில் திருவுளச் சீட்டுப் போட்டு உரிமையாக்கி, நாட்டின் பங்கீட்டுப் பணியை நிறைவுசெய்தனர். ஆண்டவர் யோசுவாவிடம் "இஸ்ராயேல் மக்களிடம் அவர்களுக்கு மோசே வழியாகக் கூறியபடி, அடைக்கல நகர்களை உங்களுக்கெனத் தேர்ந்துகொள்ளுங்கள்" எனக் கூறு. தவறுதலாக ஒருவரைக் கொன்றவர் இரத்தபழி வாங்குபவரிடம் தப்பி ஓடி ..................... இந்நகர்கள் உங்களுக்கு அடைக்கலமாக அமையும். கொலையாளி நுழைவாயிலில் நின்று பெரியவர் கேட்கும்படி தன் நிலையைக் கூறுவார். அவர்கள் அவன் தங்க இடம் கொடுப்பர். துரத்தி வந்தவர் கையில் ஒப்படைக்கமாட்டார்கள். ஏனெனில், அவர் அறியாமல் ..................... செய்தார். தீர்ப்புக்காக அவைமுன் நிற்கும்வரை, அந்நாள் தலைமைக்குரு சாகும்வரை அந்நகரில் தங்குவார். பின் தம் வீடு செல்வார்" என்றார். தேர்ந்துகொள்ளப்பட்ட அடைக்கல நகர்கள்; நப்தலி மலைநாட்டில் கலிலேயாவில் கெதேசு; எப்ராயிம் மலைநாட்டில் .....................; யூதா மலை நாட்டில் எபிரோன் எனப்படும் கிரியத்து அர்பா; பாலைநிலச் சமவெளியில் பெட்சேர்; கிலயாதில் இராமோத்து; பாசானில் கோலான் ஆகியவையாகும். அறியாமல் பிறரைக் கொன்ற எவரும் இரத்தப் பழி வாங்குபவரிடமிருந்து தப்ப இவற்றில் ..................... புகுவார். மக்களவை அவருக்குத் தீர்ப்பு வழங்கும் வரை அவர் கொல்லப்படுவதில்லை.

**விடைகள்:** **ஆண்வரின், சந்திப்புக் கூடார, தஞ்சம்புக, கொலை, அடைக்கலம், செக்கேம், இலசேமை, ஆறாவது, சிற்றூர்களும், பன்னிரு**

[வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் – 138

## பரிசுப் போட்டி




(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. தமிழில் சிறுகதை எனும் இலக்கிய வடிவத்தை அறிமுகம் செய்தவர்
(ஜெயகாந்தன் - வ.வே.சு. ஐயர் - புதுமைப்பித்தன்)

2. குடிமக்கள் 'காப்பியம்' என அழைக்கப்படுவது?
(சீவக சிந்தாமணி - சிலப்பதிகாரம் - மணிமேகலை)

3. இலங்கைப் பாராளுமன்றத்தில் மனித உரிமைகள் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு
(1995 - 1996 - 1998)

4. இரும்புச் சத்துக் குறைபாட்டால் உண்டாகும் நோய்
(என்புருக்கி - குருதிச்சோகை - காய்ச்சல்)

5. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி ...............
(அழகுதான் - பருந்தாகுமா - திரும்பிவரும்)

6. மாடு கன்று என்பது .........
(உவமைத் தொகை - உம்மைத்தொகை - பண்புத்தொகை)

பெயர் : ..............................................................................

முகவரி: ..............................................................................

..............................................................................

தொ.பே.இல. ..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 138
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 136 விடைகள்

பெத்தேலிலிருந்து, புதல்வருக்கு, யானோவாவுக்கு, மனாசே, யோசேபின், யோசுவாவையும், கானானியர், பங்கை, எப்ராயிம், இரும்புத் தேர்கள்

## அறிவை வளர்ப்போம் - 136 விடைகள்

1. 1945
2. கன்பெரா
3. சயங்கொண்டார்
4. நெய்தல்
5. மஹேல
6. பெயரெச்சம்

**பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுபவர்

- அபிஷஹான் துஷ்யந்தன்
28 , படுகாட்டார் வீதி,
மாமாங்க வீதி,
நாவற்குடா,
மட்டக்களப்பு.
- ஜெ. தரணியா,
சர்வோதய வீதி,
சத்துருக்கொண்டான்,
மட்டக்களப்பு.

போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுபவர்

- ஜோ. கீர்த்திகா,
பதுளை வீதி,
செங்கலடி.
- கு. பவ்வியா,
காளி கோவில் வீதி,
பெரிய கல்லாறு - 03.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 87 முடிவுகள்**

- முதலாம் பரிசு - 400/=
எ. ஷம்ரோன்,
எல்லை வீதி,
பெரிய கல்லாறு - 01,
கல்லாறு.
- இரண்டாம் பரிசு - 300/=
கு. ததுஷன்,
காளி கோவில் வீதி,
பெரிய கல்லாறு - 03,
கல்லாறு.
- மூன்றாம் பரிசு - 200/=
ஜ. மரினோ,
11/3, 7ம் குறுக்கு,
திருச்செந்தூர், கல்லடி,
மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காற்றில் கலந்து வரும்......

## இலங்கை வானொலி தேசிய சேவையில்

டிசம்பர் – 2014

## கிறிஸ்து பிறப்பு வார சிறப்பு நிகழ்ச்சிகள் – தமிழ்

நாள் : 24 நேரம் : மாலை 5.00 மணி

புதிய உலகம்

கிறிஸ்து பிறப்பின் திருவிழிப்பு – வழிபாட்டு மலர்

அருள்தந்தை சி.வி. அன்னதாஸ் குழுவினர்

நாள் : 25 நேரம் : மாலை 5.00 மணி

புதிய உலகம்

கிறிஸ்து பிறப்பு விழா சிறப்பு மலர்

சிறப்புச் செய்தி : பேரருள் தந்தை யோசப் பொன்னையா ஆண்டகை

கவிச்சித்திரம், சிறுகதை, பாடல்கள், இன்னும் ......

நாள் : 26 நேரம் : மாலை 5.25 மணி

புதிய உலகம்

முதல் வேதசாட்சி விழா சிறப்பு மலர்

சிறப்புச் செய்தி : பெஸ்லியோ வாஸ்

நாடகம் : 'மண்ணுலக சாட்சிகள்'

– ஸ்ரான்லி பிரபாகரன் குழுவினர் –

நாள் : 27 நேரம் : மாலை 5.25 மணி

புதிய உலகம்

திருத்தூதர் புனித யோவானின் திருவிழா சிறப்பு மலர்

சிறப்புச் செய்தி : J. பத்திநாதன்

கற்பனைப் பேட்டி : 'புனித யோவானோடு ஒரு நேர்முகம்'

– பெஸ்லியோவாஸ் குழுவினர் –

நாள் : 28 நேரம் : மாலை 6.30 மணி

புதிய உலகம்

திருக்குடும்பவிழா சிறப்பு மலர்

சிறப்புச் செய்தி : ஆனந்தா A.G. இராஜேந்திரம்

பட்டிமன்றம் : 'குடும்பம் ஓர் ஆணாதிக்க நிறுவனம் இல்லை அன்பு வாழும் உறைவிடம்'

– அருள்தந்தை டக்ளஸ் ஜேம்ஸ் குழுவினர் –

நாள் : 31 நேரம் : மாலை 5.25 மணி

புதிய உலகம்

நன்றி நாள் சிறப்பு மலர்

சிறப்புச் செய்தி : அருள்தந்தை இக்னேஸ் ஜோசப்

நாடகம் : 'நன்றி'

– றொபின்சன் குழுவினர் –

நாள் : ஜனவரி 01 நேரம் : மாலை 5.25 மணி

புதிய உலகம்

புத்தாண்டு சிறப்பு மலர்

புத்தாண்டுச் செய்தி :

அருள்தந்தை சி.வி. அன்னதாஸ்

நாடகம் : 'பிரார்த்தனையால் பெற்ற வரம்'

– ஸ்ரான்லி பிரபாகரன் குழுவினர் –

நிகழ்ச்சித் தொகுப்பு மலர்வேந்தன்

தொடர்பு சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண் - 44,
மட்டக்களப்பு.

வாசகர்கள், எழுத்தாளர்கள், விற்பனையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு மற்றும் இனிய புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்!

– தொண்டன் –

MERRY CHRISTMAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org